


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# கற்றலைக் கொண்டாடுவோம்!

எண்ணும் எழுத்தும்



ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோரை இணைத்த 'எண்ணும் எழுத்தும்' ஓராண்டு நிறைவுக் கொண்டாட்டம்

# இந்த மாத சினிமா!

## ஹரிதாஸ்

இயக்குநர் : ஜி என் ஆர். குமரவேலன்

**'ஆட்டிசம்'** பற்றி அறிந்திருக்கிறீர்களா?

2013ஆம் ஆண்டு வெளியான *'ஹரிதாஸ்'* திரைப்படமானது கற்றலில் சிறப்பு கவனம் தேவைப்படும் ஒருங்கிணைந்த கல்வி முறையை எடுத்துக் கூறும் தமிழ்த் திரைப்படம். பெற்றோர் அரவணைப்பில் எந்தத் தடையும் குழந்தைகளுக்குப் பொருட்டில்லை என்பதையும், குழந்தைகள் அனைவரும் கொண்டாடப்பட வேண்டியவர்களே என்பதையும் அழகியலோடு நம் கண்முன்னே காட்சிப்படுத்துகிறது இத்திரைப்படம்.

விருதுகள்

**11வது சென்னை பன்னாட்டுத் திரைப்பட திருவிழா :**

2வது சிறந்த திரைப்படம்
குழந்தை நட்சத்திரத்திற்கான தனிச் சிறப்பு விருது



https://rb.gy/2jruxd

திரைப்படம் பார்க்க QR CODEஐ ஸ்கேன் செய்யவும் / Linkயைப் பயன்படுத்தவும்

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

# உள்ளடக்கம்



6
இயற்கையோடு
கற்பிக்கும்
மூங்கில் பள்ளி

40




## 04 கல்வி

04 எண்ணும் எழுத்தும்
09 புதிய உரையாடல்கள் தேவை
10 செவித்திறன் குறைபாடு – தொடர்
14 கல்வி வளர்ச்சியில் பூடான்
16 கணிதத்தை எளிமையாகக் கற்பிக்க சில உத்திகள்
18 ஆசிரியர் பணியில் ஈடுபாடு இருக்க வேண்டும்!
21 உங்களிடமிருந்து...
22 முன் மாதிரியாக ஒரு போட்டி

## 24 வாழ்க்கை

24 கதை சொன்னால் நூல் பரிசு
28 எல்லோருக்காகவும் வாழ்ந்த ஆசிரியர்
30 பேச்சாளர்களை அறிமுகப்படுத்திய என் பள்ளி – பட்டிமன்றம் ராஜா
32 கோடை விடுமுறை: எப்படித் திட்டமிடலாம்?

## 34 சமூகம்

34 மாணவிகளின் மகிழ்ச்சியே எனக்கு முக்கியம்!
36 கடல்–குறித்த 10 அறிவியல் உண்மைகள்

## 38 நலம்

38 கோடைகாலத்தில் பரவும் நோய்களும் பாதுகாக்கும் முறைகளும்

## 42 பொது

42 பலவீனத்தை பலமாக மாற்றுங்கள்! – சினிமா
44 பிரம்பு உபதேசம் – சிறுகதை
50 வகுப்பறை அனுபவங்கள்
52 சிற்பியும் சிற்பங்களும் – கவிதை

கனவு ஆசிரியர்
Kanavu Aasiriyar Monthly

- 01 ஏப்ரல் 2023
- கனவு 1 இதழ் 10
- விலை : ரூ.20/-
- சென்னை

● பதிப்பாளர்: டி. ஜகந்நாதன் ● ஆசிரியர்: அமுதவல்லி ராஜேஷ்கண்ணா
● அச்சிட்டோர்: எஸ். இராமு ● அச்சகம்: சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட், #16/1, கஜபதி தோட்டம், புளியம்பேடு, திருவேற்காடு, திருவள்ளூர் மாவட்டம் – 600 077. ● பதிப்பகம்: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, எண். 68, கல்லூரிச்சாலை, சென்னை – 600 006. மின்னஞ்சல்: kanavuaasiriyar@tnschools.gov.in



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# 'எண்ணும் எழுத்தும்'
## கற்றலைக் கொண்டாடுவோம்!

### திட்டத்தின் நோக்கம்

கொரோனா பெருந்தொற்றினால் தமிழகப் பள்ளிகள், 19 மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்தன. வகுப்புகள் இல்லாத நிலையில், தொடக்கப்பள்ளி மாணவர்களின் கற்றலில் மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டிருந்தது. இக்கற்றல் இடைவெளியைக் குறைத்து, 2025-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டில் உள்ள 8 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் எண்ணறிவையும் எழுத்தறிவையும் பெறவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, 2022-23ஆம் கல்வியாண்டு முதல் 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

### திட்டத்தின் இலக்கு

தமிழ், ஆங்கிலம், சூழ்நிலையியலுடன் இணைந்த கணிதம் என மூன்று பாடங்களுக்கும் பாடவாரியாக ஆசிரியர்களுக்கான கையேடு, மாணவர்களுக்கென பயிற்சிப் புத்தகம், கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகளை உருவாக்க, கற்பித்தல் பெட்டி போன்றவை ஒவ்வொரு பள்ளிக்கும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர் மையக்கற்றலை அடிப்படை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு மாணவரின் கற்றலை அரும்பு, மொட்டு, மலர் என்ற மூன்று படிநிலைகளாக வகுத்து அனைவரும் கற்றல் விளைவுகளை அடைவதை உறுதி செய்யும் நோக்கில் மாணவர்கள் தாங்களே ஒவ்வொரு செயல்பாடுகளிலும் ஈடுபட்டு ஆர்வமுடன் கற்றுக்கொள்கின்றனர். மொழிப் பாடங்களின் எழுத்து, சொல், வாக்கியம், பத்தி மற்றும் கணிதப் பாடத்தில் அன்றாட வாழ்க்கைச் சூழலில் பயன்படும் கணக்குகள் என மாணவர்களின் வாழ்வியலோடு தொடர்புடைய அம்சங்களைப் பயன்படுத்திக் கற்றுக்கொள்வதால் கற்றல் நோக்கங்களை மாணவர்கள் அறிந்து கற்கின்றனர்.

### திட்டத்தின் சிறப்பம்சங்கள்

இத்திட்டமானது தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 3ஆம் வகுப்பு தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் (சூழ்நிலையியல் ஒருங்கிணைப்புடன்) கண்டறியப்பட்ட கற்றல் விளைவுகளை மையப்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளின் கற்றலை மகிழ்ச்சியாக்கும் வகையில் 'எண்ணும் எழுத்தும்' வகுப்பறையில், பாடல் களம், கதைக் களம், செயல்பாட்டுக் களம், படைப்புக் களம், படித்தல் களம் மற்றும் பொம்மலாட்டக் களம் போன்றவை அமைக்கப்பட்டு குழந்தைகளின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஊக்குவிக்கும் வகையில் கற்றல் கற்பித்தல் நடைபெறுகின்றது. 'எண்ணும் எழுத்தும்' திட்டமானது மாணவர்களை மையப்படுத்தி, கற்றல் விளைவுகளுக்கு ஏற்பச் செயல்பாடுகளாக வடிவமைக்கப்பட்டு வண்ணமயமான கற்றல் உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பிக்கப்படுகிறது



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com







இதனால், குழந்தைகளுக்குப் பிடித்தமான கதைகள், பாடல்கள், விளையாட்டுகள், புதிர்கள், கலைகள் மற்றும் கைவினைப் பொருள்களால் எண்ணும் எழுத்தும் வகுப்பறை நிறைந்திருக்கின்றது.

பாடவாரியாக உருவாக்கப்பட்டுள்ள ஆசிரியர் கையேடுகளும் நிலைவாரியான மாணவர் பயிற்சி நூல்களும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மூன்று பருவங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கற்பித்தல் முறையானது வகுப்புவாரியான கற்றலில் இருந்து நிலைவாரியான கற்றலுக்கு மாற்றியமைக்கப்பட்டு அனைத்து நிலை மாணவர்களும் திறம்படக் கற்றுக் கொள்வதை உறுதிசெய்கிறது. ஒவ்வொரு பாடத்திலும் தகவல் பரிமாறுதல், ஒன்றிணைந்து செயல்படுதல், நல்வாழ்வு மற்றும் முழுமையான பண்புகளை உள்ளடக்கிய வாழ்க்கைத் திறன்கள் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## திட்டம் – கடந்து வந்த பாதை

'எண்ணும் எழுத்தும்' திட்டமானது செயல்முறைப்படுத்தப்பட்டு ஓராண்டு முடிவடைகின்ற நிலையில் கற்றல் கற்பித்தல் செயல்முறைகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தத் தாக்கத்தைப் பெற்றோர்களிடமும் சமுதாயத்திடமும் தெரியப்படுத்தும் நோக்கில் 'எண்ணும் எழுத்தும்-கற்றலைக் கொண்டாடுவோம்' நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் பெத்லகேம் பள்ளியில் நடைபெற்ற எண்ணும் எழுத்தும் பரப்புரை விழாவில் கலந்துகொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

## வெற்றியை நோக்கிய பயணம்

'எண்ணும் எழுத்தும்-கற்றலைக் கொண்டாடுவோம்' நிகழ்வின் ஒரு பகுதியாகப் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த மாநிலம் தழுவிய பரப்புரை நடத்தப்பட்டது. பரப்புரையின் ஒரு பகுதியாக, எண்ணும் எழுத்தும் சுவரொட்டிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் பொருள்களுடன் கூடிய திறந்த வாகனம் ஒன்று அலங்கரிக்கப்பட்டு மாவட்டத்தின் முக்கிய இடங்களில் வலம்வந்து எண்ணும் எழுத்தும் திட்டத்தையும் வகுப்பறைகளில் அது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் எடுத்துக்காட்டியது.

எண்ணும் எழுத்தும் திட்டம் பற்றி பொதுமக்களுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்துப் பள்ளிகளிலும், பள்ளி அளவிலான நிகழ்வு, 2023-மார்ச் 20 மற்றும் 21ஆம் நாட்களில் நடத்தப்பட்டது. அந்நாளில் பெற்றோர் தங்களது குழந்தைகளின் வண்ணமயமான கற்றல் கருவிகள் நிறைந்த வகுப்பறையையும் மாணவர்களின் செய்து கற்றல் செயல்பாடுகளையும் பார்வையிட்டனர். பெற்றோர் முன்னிலையில் மாணவர்கள் தங்களுடைய திறமைகளையும் கற்றலையும் வெளிக்காட்டினர். பெற்றோரும் அச்செயல்பாடுகளில் கலந்துகொண்டு, தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடித் தங்களுடைய கருத்தையும் வழங்கினர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, பெற்றோர் மற்றும் பொதுமக்கள், தங்களுடைய குழந்தைகளின் வாழ்வில் எண்ணும் எழுத்தும் கற்றல் கற்பித்தலானது கூடுதல் நம்பிக்கையையும் கற்றல் விளைவை மேம்படுத்தி உள்ளதையும், வகுப்பறைகள் வழக்கமான கற்பித்தல் முறையில் இருந்து எவ்வகையில் மாறுபட்டு உள்ளன என்பதையும் புரிந்து கொண்டனர்.

## திட்டத்தின் வளர்ச்சி

'கல்விதான் உலகை ஆளும் கருவி' என்பதை மாணவரின் மனதில் விதைத்துவிடுவதையே நம் பள்ளிக் கல்வித் துறை தன் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. எண்ணும் எழுத்தும் திட்டமானது 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இத்திட்டம் 2023-24ஆம் கல்வியாண்டில் 4 மற்றும் 5ஆம் வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என 2023-24ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com



# இயற்கையோடு கற்பிக்கும் மூங்கில் பள்ளி

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதனுக்கும் இயற்கைக்குமான தொடர்பு அறுந்துவிட்டது எனப் பல சூழலியலாளர்கள் கருத்துக் கூறி வருகின்றனர். அது ஓரளவுக்கு உண்மையும் கூட. எனினும் மனிதன் தனக்கும் இயற்கைக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்து, பழைய தொடர்பை மீட்டெடுக்க விரும்புகிறான். அதனால்தான் இயற்கை அழகு பொதிந்த இடங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது. அவை சுற்றுலாத் தலங்களாகவும் மாறுகின்றன.

இயற்கையைப் பாதுகாக்கவும் மரங்கள் நடும் திட்டங்களையும் உலகில் பல அரசாங்கங்கள் ஊக்குவிக்கின்றன.

பிரம்மாண்டக் கட்டடங்களிலேயே பெரும்பாலும் பள்ளிகள் இயங்கி வரும் இன்றைய சூழலில், மூங்கில் வாசம் நிறைந்த ஒரு பசுமைப் பள்ளி உலகளவில் கவனம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. அந்தப் பள்ளியைப் பற்றி நாம் இங்கே அறிந்துகொள்வோம்.

ஆசிய நாடான இந்தோனேசியாவில் உள்ள பாலி தீவு (Bali) மாகாணத்தில்தான், மூங்கில்களால் வடிவமைக்கப்பட்ட 'கிரீன் ஸ்கூல்' எனும் பசுமைப் பள்ளி கட்டப்பட்டுள்ளது. பாலியின் உபுத் (Ubud) நகரின் செழிப்பான வனப்பகுதியில் இது அமைந்துள்ளது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்ப்பதே தங்கள் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கும் பள்ளி நிர்வாகத்தினர், அதை மனதில் கொண்டே பள்ளியை வடிவமைத்திருக்கிறார்களாம்.

பள்ளி முழுமையுமே இயற்கை ஆற்றலின் உதவியோடு இயங்குகிறது என்பது இன்னுமொரு வியப்பு. ஆம்... உணவுக் கழிவுகள் கூட இங்கே உரமாய் மாறுகிறது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## உலகத்தை சிறந்த இடமாக மாற்ற வேண்டும்

"நம் கல்வியில் மாற்றம் வேண்டும். எதிர்காலத்தை மனதில் கொண்டு அதைத் தகவமைப்பது அவசியம். கல்வியின் நோக்கம் இந்த உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவதே" என்கிறார் பள்ளியின் தலைவர் சல் கோர்டன் (Sal Gordon).

## தடைகள் கிடையாது

வனப்பகுதியில் அமைந்துள்ள இந்தப் பசுமைப் பள்ளியில் சுவர்கள் கிடையாது. மற்ற பள்ளிகளைப் போல் இங்கு மாணவர்களின் வருகைப் பதிவுக்கு எந்த வற்புறுத்தல்களும் இல்லை. சுவர்கள் இல்லாததால் கவனச்சிதறல்கள் ஏற்படலாம். ஆனால் இயற்கையால் கவனச்சிதறல் ஏற்பட்டால் பரவாயில்லை என்கிறது பள்ளி நிர்வாகம்.

## இயற்கை சக்தியின் பயன்பாடு


சூரிய ஒளி, காற்று, நீர், வெப்பம் போன்ற ஆற்றல்களின் மூலம் பள்ளி இயக்கத்திற்கான சக்தி பெறப்படுகிறது. இதற்கான அமைப்புகள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. அது குறித்து மாணவர்களுக்கும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## பசுமைப் பள்ளியின் சிறப்பு

"3 முதல் 18 வயது வரையுள்ள மாணவர்களுக்கு கணிதம், அறிவியல் முக்கிய பாடங்களாக நடத்தப்படுகின்றன. மாணவர்களுக்குத் திறன்வளர் பயிற்சியும், தொழில்முனைவோராக மாறுவதற்கான பயிற்சியும் வழங்கப்படுகின்றன.

பள்ளியின் உள்ளே இயங்கும் உணவகத்தில் மேலாளர், கணக்கர், சமையல் நிபுணர், பணியாள் ஆகிய பொறுப்புகளை மாணவர்களே ஏற்று நடத்துகின்றனர். இது, நாளை வெளியுலகில் அவர்கள் சந்திக்கப் போகும் சவால்களுக்கு உதவியாக இருக்கும்" எனப் பள்ளித் தலைவர் சல் கோர்டன் தெரிவிக்கிறார்.

ஆடல், பாடல் எனப் பல்வேறு கலைசார்ந்த பயிற்சிகளும் மாணவர்களுக்குச் சொல்லிக்





### ஏன் மூங்கில்?

மூங்கில்கள் இந்தோனேசியாவின் அடையாளங்களில் ஒன்று எனச் சொன்னால் மிகையாகாது. இங்கு 160 மூங்கில் இனங்கள் காணப்படுகின்றன.

மூங்கில்கள் வேகமாக வளரும் தன்மையுடையது. மூன்று வருடங்களிலேயே நன்கு வளர்ந்துவிடும். கட்டடப் பணிகளில் பயன்படுத்த நம்பகத்தன்மை வாய்ந்த பொருளாக மூங்கில்கள் இருக்கின்றன.

கட்டடக் கலையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் மூங்கில்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. வெப்ப மண்டலப் பகுதிகளில் அமைந்துள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பெரும்பாலும் மூங்கில்களைப் பயன்படுத்தியே தங்கள் வீடுகளை வடிவமைத்துக் கொள்கின்றனர். பூச்சித் தொல்லை போன்றவற்றைத் தவிர்க்க மூங்கில்களைப் பதப்படுத்திப் பயன்படுத்துகின்றனர். புவி வெப்பமயமாதல், காலநிலை மாற்றம் எனப் பல்வேறு சிக்கல்களை நாம் சந்தித்து வருகிறோம். இனிவரும் காலங்களில் பசுமைப் பள்ளிகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதுபோல் மூங்கில்களால் பசுமைப் பள்ளிகள் அமைக்காவிட்டாலும், பள்ளி வளாகங்களில் அதிக மரங்களை நட்டு நம் பள்ளியைப் பசுமையாக மாற்ற முடியும்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



கொடுக்கப்படுகின்றன. துறைசார்ந்த வல்லுநர்கள் அவ்வப்போது சிறப்பு வகுப்புகள் எடுக்கின்றனர்.

அதுமட்டுமல்லாது இயற்கை சார்ந்து வாழ்வதற்கான சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. செடி வளர்ப்பு. தோட்டக்கலை போன்றவற்றை குழந்தைகள் அறிந்துகொள்கின்றனர். அதோடு பாலினச் சமத்துவம் உள்ளிட்ட பல்வேறு சமூக விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

## கட்டுமானக் கலைஞர்கள்

மூங்கில்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இப்பள்ளியின் கட்டுமானப் பணிகளை, ஜெர்மானியக் கலைஞர் ஜொர்க் ஸ்டாம் (Jorg stamm) என்பவர் இபுகு ஸ்டுடியோ (IBUKU studio), அட்லியர் (Atelier) ஸ்டுடியோவுடன் இணைந்து மேற்கொண்டுள்ளார். சுற்றுச்சூழல் கட்டடக் கலையில் இந்தப் பசுமைப்பள்ளி ஒரு மைல்கல் என்றே சொல்லலாம். தொழில்முனைவோர்கள் ஜான், சிந்தியா ஹார்டி (Cynthia Hardy) ஆகியோர் இதன் உருவாக்கத்துக்கு முக்கிய காரணமானவர்கள். கட்டடக் கலையில் பல்வேறு விருதுகளை இப்பள்ளி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

– புஷ்பவள்ளி





Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# புதிய உரையாடல்கள் தேவை

**தமிழில் பிரபலமான வார, மாத இதழ்களில் கல்வியாளர் பேரா. ச. மாடசாமி எழுதிய, 12 கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.**

இந்நூலிலுள்ள கட்டுரைகளின் தலைப்புகளே நம்மை எளிதில் ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளன. இந்நூலில் படித்து வியந்த சில வரிகளை மேற்கோள் காட்டுவது மிக அவசியமெனக் கருதுகிறேன். அவையாவும் நம் அகத்தைக் கிளறி நம்மைப் புதிய கோணத்தில் நிச்சயம் பயணிக்க உதவும் என்று உறுதியாக நம்புகிறேன்.

'பள்ளி தரும் தண்டனைகள் ஒரு வன்முறை என்றால், அது வழங்கும் ரேங்கும் பரிசும் தந்திரங்கள்! யாவரும் சமம் அல்ல என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தும் தந்திரங்கள்' என்கிறார். (இந்நேரத்தில் ரேங்க் முறையை ஒழித்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி சொல்லியே ஆகவேண்டும்.) அவர் மேலும்,

'பள்ளிக்குப் பெருமை 'ரிசல்ட்' அல்ல. அன்பின் மையங்களை உருவாக்கும் ஆசிரியர்கள்தான் பள்ளிக்குப் பெருமை.'




'தகவல்களைத் திணிக்கும் வகுப்பறை அல்ல- தகவல்கள் உயிர்பெறும் வகுப்பறைதான் இன்றைய தேவை'

'மாணவர்கள் வெளியே கற்றுக் கொண்டுவந்து வகுப்பறையில் அது குறித்து விவாதிக்கும் வகையில் பாடத்திட்டத்தில் ஒரு சிறு பகுதியையாவது வடிவமைக்க வேண்டும்'

'வகுப்பறையில் நட்பை மலர வைப்பதற்காகத் தோற்றுப் போங்கள். தோற்பதற்குக் கூச்சப்படாதவர்கள்தான் உண்மையான வீரர்கள்; உண்மையான ஆசிரியர்கள்.'

'குழந்தைகளின் உலகங்கள் உயிர்பெற, தொழில்நுட்பம் மட்டும் போதாது; பாடப்புத்தகம் மட்டும் போதாது. உள்ளமும் உணர்வும் கனிந்த ஒரு வகுப்பறை வேண்டும்.'

இப்படி நூல் முழுவதும் பல மேற்கோள்கள் நிறைந்துள்ளன. இதுபோல் ஏராளமான தகவல்களும், துணுக்குகளும், நகைச்சுவைகளும், விடுகதைகளும், நாட்டுப்புறப் பாடல்களும், சொலவடைகளும் விரவியுள்ளன.

டால்ஸ்டாயின் 'முட்டாள் இவான்' என்ற கதையையும் கிறிஸ்டோபர் மையர்ஸ் எழுதிய 'என் பேனா' கதையையும் வேல. ராமமூர்த்தியின் 'கிறுக்கு சண்முகம்' கதையையும் கோவிந்த் பன்சாரேவின் 'யார் சிவாஜி?' நூலையும் அறிஞர் அண்ணாவின் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' ஆகிய நாடக நூலையும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தையும் தூண்டுகிறது இந்நூல். ஒரு நூல் பல நூல்களைக் கற்பதற்கான வாசலைத் திறக்கும் என்பதையும் இந்நூல் நிரூபணம் செய்கிறது.

ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் என்பேன். வாசிப்பதுடன் நில்லாமல் புதிய உரையாடல்களின் வழி அடுத்தகட்ட பயணத்திற்கு நகர்வதும் தேவை. சமூக மாற்றமே இன்றைய கல்வி மாற்றத்திற்கான அடிப்படை தேவையாகும்.

– பா.அசோக்குமார், பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.பள்ளி, குள்ளம்பாளையம்,
சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்

| | |
|---|---|
| நூல் | : அன்பென்பது ஒரு தந்திரம் அல்ல |
| ஆசிரியர் | : ச.மாடசாமி |
| வெளியீடு | : பாரதி புத்தகாலயம், 7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18 |
| விலை | : ரூ.70/- |



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



எல்லோருக்குமான
# கல்வி–5

'எல்லோருக்குமான கல்வி' தொடரில் அறிவுத்திறன் குறைபாடு உடைய குழந்தைளுக்கு கற்பிக்கும் முறைகளை அறிந்துகொண்டோம். கடந்த இதழில் செவித்திறன் குறைபாடு [Hearing Impairment] உடைய குழந்தைகளையும் அவர்களுக்குக் கற்பித்தல் முறை பற்றிய முதல் பகுதியைப் படித்திருப்பீர்கள். அக்கட்டுரையின் தொடர்ச்சியை இனிக் காண்போம்.



# செவித்திறன் குறைபாடு - 2



## சமூக அறிவியல்

சமூக அறிவியல் என்பது கடந்த கால நிகழ்வுகளை, நடப்பு நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளவும், ஒரு நாட்டை பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும், சமுதாயத்தைப் பற்றியும், பொருளாதார வளர்ச்சியைப் பற்றியும், நாட்டின் இயற்கை அமைப்பைப் பற்றியும், அதன் வளங்கள், பயன்கள் பற்றியும் அறிய உதவுவதே ஆகும்.

## சமூக அறிவியல் கற்பித்தலின் நோக்கங்கள்:

- வரலாறு எழுதும் திறன் பெறல்.
- வரலாற்றை ஒரு அறிவியல் பாடமாகக் கற்பிக்கும் திறனைப் பெறல்.
- நினைவாற்றலை ஆய்வு செய்யும் திறனை வளர்த்தல்.
- வரலாற்றுத் தலைவர்களின் படைப்புகளையும், நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளும் திறனைப் பெறல்.
- நாகரிகப் பண்பாட்டை வளர்த்தல்.
- கடந்த கால நிகழ்வுகளைத் தெரிந்து கொள்ளும் திறனைப் பெறல்.
- மாணவர்களின் நாட்டுப்பற்றை வளர்க்கும் திறனைப் பெறல்.
- புவியின் இயற்கைப் பிரிவுகள் பற்றி அறியும் திறனைப் பெறல்.
- மனித வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வேறு காரணிகள் பற்றி அறியும் திறனைப் பெறல்.
- இயற்கையின் மேல் பற்றினை ஏற்படுத்துதல்.

## சமூக அறிவியல் கற்பித்தலின் முறைகள்

1. கதை சொல்லுதல் (Story Telling Method)
2. விளையாட்டு முறை (Playway Method)



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

3. ஒப்பிடுதல் முறை (Comparative Method)
4. குறிப்பிட்ட, பங்கேற்று நடித்தல் (Role Play)
5. விசாரணைத்திறன் முறை (Enquiring Method)
6. சுற்றுப்புறச் சூழ்நிலை முறை (Environmental Approach)
7. வாய்மொழியாகக் கற்பித்தல் முறை (The Oral Method)
8. பாடப்புத்தக முறை (The Textbook Method)
9. செயல்திட்ட முறை (The Project Method)
10. நடித்தல் அல்லது நாடக முறை (The Dramatization Method)
11. சிக்கல் தீர்க்கும் முறை (The Problem-Solving Method)
12. கண்டறிதல் முறை (Heuristic Method)
13. விவாதித்தல் முறை (Discussion Method)
14. இயற்கைப் பிரிவு அணுகுமுறை (Natural segmentation approach)
15. படங்களிலிருந்து கற்றல் (Learning Form Picture)
16. விரித்துரைக்கும் முறை (Descriptive Method)
17. சொற்பொழிவு (Lecture Method)
18. விதிவரும் முறையும், விதி விளக்கு முறையும் (Inductive, Deductive Approach)




## மாதிரி வகுப்பு

- மாணவர்களைத் தயார் செய்தல்
- நோக்கங்கள்
- கற்றல் பொருள்
- கற்பித்தல் வழிமுறைகள்
- மதிப்பீடு
- தொடர்பணி
- கரும்பலகைச் சுருக்கம்

### மாணவர்களைத் தயார் செய்தல்

1. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் எவை?
2. பொருட்களை எங்ஙனம், எப்படி கேட்டு வாங்குகிறோம்?
3. நாம் வாங்கும் பொருட்கள் அனைத்தையும் ஒரே அளவுகளைக் கூறி வாங்குகிறோமா?

இதற்கான பதிலை மாணவரிடம் கேட்டுப் பெறுதல். இதில் நம் வகுப்பில் கேட்கும் திறனில் குறைபாடுடைய மாணவன் இருப்பின் அவரின் கருத்தையும் ஆசிரியர் பெறுதல் மிக மிக அவசியம்.

### நோக்கங்கள்

1. அளவைகள் என்றால் என்ன? அவற்றின் வகைகள் யாவை?
2. அவற்றைப் பயன்படுத்தி நாம் பெறும் பொருட்களைக் கேட்டல்.
3. அளவைகள் பற்றிய பயன்பாட்டை மாணவர் வாழ்வியல் கணக்குகளில் பயன்படுத்தத் தேவையான பயிற்சியை அளித்தல்.



### கற்றல் பொருட்கள்

1. பூச்சரம், வகுப்பறை பொருட்கள், அளவுகோல் (½, 1 & 2 அடி)
2. Inch Tape (தையல் கடைக்காரர் பயன்படுத்துவது மற்றும் சுருள் Inch Tape)
3. படிகற்கள்
4. முகத்தல் அளவைகள்
5. அளவு வாய்ப்பாகக் கொண்ட வரைபட அட்டை

### கற்பித்தல் வழிமுறைகள்

1. நோக்கங்கள் குறித்த வினாக்களை மாணவரிடம் கேட்டு கரும்பலகையில் எழுதுதல்.
2. நாம் இன்று படிக்க வேண்டிய பாடம் 'நீட்டல் அளவை'
3. நீட்டல் அளவை என்றால் என்ன?
4. பூச்சரத்தை எங்ஙனம் அளப்பாய்?
5. அளவுகோலைப் பயன்படுத்தி 6 செ.மீ. பக்க அளவு கொண்ட ஒரு சதுரம் வரைந்து வண்ணம் தீட்டுக.
6. வகுப்பறையைக் 'காலடி' கொண்டு அளக்க மாணவரைப் பணித்தல்.
7. நீட்டல் அளவைப் பயன்படுத்திப் பெறும் பொருட்களை – குறைவாகக் கேட்கும் திறன், கேட்டலில் குறைபாடுடைய மாணவரைக் கரும்பலகையில் காட்டியோ (அல்லது) கூறச்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

செய்தோ அனைவரின் பாராட்டுகளையும் அம்மாணவனுக்குத் தெரிவித்து ஊக்கப்படுத்திட வேண்டும்.


8. ஒரு அடி அளவுகோலைக் கொண்டு வகுப்பறையை அளக்கப் பணித்தல். அதைக் கரும்பலகையில் எழுதுதல்.

9. 'சாண்' அளவு கொண்டு வகுப்பறை மேசையை அளக்கப் பணித்தல்.

10. ஒரு சட்டை அல்லது கால்சட்டைக்குத் தேவையான துணி எவ்வளவு என்று கூறி Inch Tape-ஐ பயன்படுத்தி மாணவர்களின் உயரங்களை ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றி அளக்கப் பணித்து ஒரு நோட்டில், பெயர், உயரம் (செ.மீ.) குறிப்பிட்டு எழுதவும், அதைத் தெரிந்து கொள்ளவும் செய்தல்.

11. இங்ஙனம் சாண், முழம், காலடி கொண்ட அளவைகள் ஒவ்வொருவரின் அளவுக்கும் வேறுபட்டவையாக உள்ளதை ஆசிரியர் சுட்டிக்காட்டி விளக்குதல்.


12. அளவுகோல் Inch Tape என்பன மாறாத




அளவைகள் என்பதையும் மாணவரிடம் ஆசிரியர் விளக்குதல்.

13. அளவு வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி கணக்குகளை ஆசிரியர் கற்பித்தல் வேண்டும். மாணவர்கள் கற்றுள்ளனரா என அறிய வினாக்கள் கேட்டு மீட்டறிதல் வேண்டும்.

## நிர்ணயிக்கப்பட்ட / வரையறுக்கப்பட்ட மதிப்பீடு

| நீட்டல் அளவை | நிறுத்தல் அளவை | முகத்தல் அளவை |
|---|---|---|
| மி.மீ., செ.மீ., மீ., கி.மீ., | கிராம், கிலோ கிராம் | மி.லி., லி., |
| துணி  | அரிசி  | பால்  |
| பூச்சரம் | பருப்பு வகைகள் | எண்ணெய் |
| மரச்சாமான் | காய்கறிகள் | தண்ணீர் |
| வரைபடம் | பழங்கள்  | குளிர்பானம்  |
| கட்டடம் கட்டுதல் | | |
| தொலைவு | | |

| மாணவர் பெயர் | உயரம் | நீட்டல் அளவை | |
|---|---|---|---|
| | அடி | செ.மீ. | சாண், முழம், காலடி, தப்படி, அளவுகோல் (1/2, 1, 2 அடி) Inch Tape |



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



1. யமுனா ஒரு மைதானத்தில் 7 நாள்களில் 21 கி.மீ 42 மீ சுற்றி வருவார். ஒரு நாளில் அவர் சுற்றி வரும் தூரம் எவ்வளவு?
2. ஒரு மின் கம்பி சுருளின் நீளம் 8 மீ 70 செ.மீ இதனை 6 சம அளவுள்ள துண்டுகளாக வெட்டினால் ஒரு துண்டின் நீளம் எவ்வளவு?
3. வாழ்வியல் கணக்குகளைக் கூறி மாணவரின் கற்றல் திறனை மதிப்பீடு செய்தல்.

## தொடர் பணி

1. அம்மா வாங்கிய இரண்டு சேலைகளின் நீளங்களை அளந்து மொத்த நீளம் எவ்வளவு என்று எழுதிவரப் பணித்தல். (நீளத்தை மீட்டரில் கூறுக.)
2. உன் உயரத்தையும், உன் நண்பனின் உயரத்தையும் அளந்து எடுத்து, அவற்றில் யார் உயரமானவர் என்பதையும், எவ்வளவு உயரம் அதிகம் என்பதையும் எழுதிவரப் பணித்தல்.

## கரும்பலகைச் சுருக்கம்

வகுப்புப் பாடம் : கணக்குப் பகுதி : அளவைகள்
தலைப்பு : 'நீட்டல் அளவை'
பொருட்கள் மற்றும் அவற்றின் அளவைகள்.

## நீட்டல் அளவைப் பயன்படுத்தும் தொழிலாளர்கள்

ஆட்டோ ஓட்டுநர் (மீட்டர்), துணி தைப்பவர், கொத்தனார், மரவேலை செய்பவர், கட்டட வரைபடம் வரைபவர், பூ கட்டுபவர், துணிக் கடைக்காரர்.

## செயல் திட்ட முறை

'திட்டம்' - என்பது இயல்பான சூழ்நிலையில் நிறைவேற்றப்படும் புதிர் கொண்ட செயல் ஆகும்.



## செயல் திட்டங்கள்

1. கடை வைத்து விளையாடுதல்
2. விழாக்கள் நடத்தி வரவு செலவு கணக்கிடுதல்
3. கண்காட்சி ஆண்டு விழா நடத்துதல்
4. சுற்றுலா அழைத்துச் செல்லுதல்
5. டிக்கெட் கொடுத்து பஸ், இரயில் பயணம் செய்வது போல விளையாடுதல்.
6. வகுப்பறைக்கு வெள்ளை அடித்தல், கரும்பலகைக்கு வண்ணம் தீட்டுதல்.
7. உனது வகுப்பில் உள்ள நண்பர்களின் உயரத்தை மீட்டரில் அளந்து செமீ-களாக்குக.

(இதன் மூலம் வாழ்க்கைக் கணக்கை மாணவர்களுக்குக் கற்றுத்தர முடியும்)

# கற்றல் களம்

## வகுப்பறை செயல்பாடு

1. வெளிச்சமாக இருத்தல் அவசியம்.
2. கரும்பலகை, எழுதுவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
3. கேட்கும் திறன் குறைவான மாணவன், மாணவி.
4. செவித் துணைக்கருவி, செவி அச்சுப் பொருத்தி இருத்தல் அவசியம்.
5. அவற்றின் பயன், செயல்முறை, பராமரிப்பு இவற்றில் செவித்திறன் குறைபாடுடைய மாணவனின் பெற்றோர், ஆசிரியர்கள், வகுப்பறை மாணவர்கள், பள்ளி மாணவர்கள், தலைமை ஆசிரியர் ஆகியோரிடையே தகுந்த விழிப்புணர்வு அவசியம். (மாணவனைப் பற்றிய புரிதல் அவசியம்).
6. செவித்திறன் குறைவுடைய மாணவன் ஆசிரியர் மற்றும் செயல்பாடுகளை உற்று நோக்கும் வண்ணம் அமர்தல். (ஆசிரியரின் உதட்டசைவைப் புரிந்து கொள்ளும் வண்ணம் தரையில் அமராது உயர்வான இடத்தில் அமர வழி செய்தல்).
7. ஆசிரியர், வண்ணச் சுன்னக்கட்டி, புத்தகம் (படங்கள்) செயல்முறை கொண்டு நிதானமாக விளக்குதல்.
8. குறைவாகக் கேட்கும் திறன் உடைய மாணவனுக்கு உதவிகரமாக மற்றொரு மாணவனை அமரச் செய்தல். அனைத்து மாணவர்களும் நண்பர்களாக இருக்க ஆசிரியர் ஊக்கப்படுத்துதல்.
9. ஆசிரியரின் கூடுதல் கவனம் அந்த மாணவனுக்குத் தேவை என்பதை ஆசிரியர், தலைமை ஆசிரியர் உணர்தல் வேண்டும்.
10. முடிந்த பருவத்தில் உள்ள பாடக் கருத்துக்களை ஆசிரியர் நினைவுகூர்தல் மிக மிக அவசியம்.

(தொடரும்)



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

# கல்வி வளர்ச்சியில் பூடான்

உலகம் முழுவதும் நவீனக் கல்வி தொடங்கிய வரலாறு பல்வேறு விதங்களில் உருவாகி வந்துள்ளது. ஆனால் முற்றிலும் மாறுபட்ட நிலப்பரப்பையும் கலாசாரச் சூழலையும் கொண்ட நாடான பூடான் மிகத் தாமதமாகவே பொதுக் கல்வி முறைக்குள் வந்தது. ஆம்! பூடானில் 1960ஆம் ஆண்டில்தான் பொதுக் கல்வி முறை தொடங்கப்பட்டது.

## இருபதாம் நூற்றாண்டில் பொதுக் கல்வி

20ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் பூடான் அரசு பட்ஜெட்டில் கல்விக்கென தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது வளர்ச்சி அடைந்து 2010ஆம் ஆண்டு அரசின் மொத்த வரவு செலவில் ஐந்தில் ஒரு பங்கு, கல்விக்கென ஒதுக்கீடு செய்வது என்ற நிலை எட்டப்பட்டது. மன்னராட்சி முறையும் பௌத்த மதக் கலாசாரமும் நிலவி வந்த நிலையில் பூடானில் பாரம்பரிய சமயக் கல்வியே 20ஆம் நூற்றாண்டின் இறுதி வரை போதிக்கப்பட்டது.

பூடானின் நவீனக் காலம் 1907ஆம் ஆண்டுதான் தொடங்குகிறது. மன்னர் உக்யென் வாங்சுக் தான் முதன்முதலாகப் பூடானை ஒன்றிணைத்தவர். பிரிட்டிஷ் அரசின் செல்வாக்கோடு மேற்கத்திய பாணியிலான நவீனக் கல்வியைத் தொடங்கி வைத்தவர் இவர்தான்.

அதன் பிறகு 1914ஆம் ஆண்டு மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிலர் மட்டும் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்றுத் திரும்பினர். இந்தச் சூழலில் மன்னர் இரண்டாம் ஜிக்மே சிங்யே வாங்சுக் Jigme Singye Wangchuck காலத்தில்தான் பூடானில் பள்ளிகள் உருவாக்கப்பட்டன. இந்தப் பள்ளிகளில் மொழிப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

## ஆரம்பப் பள்ளிகள் தொடக்கம்

1950ஆம் ஆண்டு ஜிக்மே டோர்ஜி வாங்சுக் காலகட்டத்தில் அரசு ஆதரவுடன் பொது மக்கள் பயில்வதற்கான தொடக்கப் பள்ளிகள் உருவாக்கப்பட்டன. இதற்காக ஸ்காட்லாந்தில் உள்ள திருச்சபையிலிருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து அங்கு படிப்படியாகப் பல்வேறு மாவட்டங்களிலும் பள்ளிகள் தொடங்கப்பட்டன. ஆனால் இவை அனைத்தும் அக்கால கட்டத்தில் மன்னர்கள் மற்றும் உயர் குடியினர் பயில்வதற்கான பள்ளிகளாகவே இருந்தன. மேலும் இவற்றில் மாணவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.





Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## முதல் ஐந்தாண்டுத் திட்டம்

1940ஆம் ஆண்டு தொடங்கி 1960ஆம் ஆண்டு வரையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பள்ளிகள் கட்டப்பட்டு படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்த நிலையில் இவை நிலையான இலக்கை நோக்கிச் செல்லத் தொடங்கியது. ஏனெனில் இந்தக் காலகட்டத்தில்தான் நாட்டில் இருந்த பல்வேறு பள்ளிகளையும் அந்நாட்டு அரசு, பொதுப் பள்ளிகளாக மாற்றியமைக்கத் தொடங்கியது.

1960ஆம் ஆண்டு பூடானில் 20 பொதுப் பள்ளிகள், 30 தனியார் பள்ளிகள் இயங்கின. அவற்றில் பயில்வதற்காக சுமார் 2500 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்பு அங்கில்லை என்பதால் அதற்கு அவர்கள் இந்தியாவுக்கு வரவேண்டி இருந்தது. பூடானில் பள்ளிகளில், தொடக்கக் காலங்களில் நேபாளத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்களுக்காக நேபாள மொழியும், எல்லைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு ஹிந்தியும், ஒரு சில பள்ளிகளில் பூடான் 'சோங்கா' (Dzongkha) மொழியும் போதிக்கப்பட்டன.

பெரும்பாலான பள்ளிகள் உள்ளூர் மக்களால் கட்டப்பட்டு அவர்களது தேவைக்கு ஏற்றபடி நேபாளம் மற்றும் இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்துக் கொண்டன. சுமார் 20 பேருக்கு ஒரு ஆசிரியர் என்ற அளவிலும், உள்ளூர் மக்களால் திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு ஆசிரியருக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தன. 1960ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த நிலை படிப்படியாக மாறத் தொடங்கியது.

இந்தச் சூழலில்தான் 1961ஆம் ஆண்டு முதன்முதலாகக் கல்வி வளர்ச்சிக்காக முதல் ஐந்தாண்டு திட்டம் அந்நாட்டு அரசால் வகுக்கப்பட்டது. இதன் மூலம் உருவாக்கப்பட்ட பள்ளிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில அனுமதிக்கப்பட்டனர். செங்மரி தொடக்கப் பள்ளி என்ற பள்ளியில்தான் அப்போது நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயிலத் தொடங்கினர்.

இதன் பிறகுதான் பூடானில் ஒரே மாதிரியான கல்வி முறையும், ஆங்கில வழிக் கல்வியும் உருவாக்கப்பட்டன. இவை அனைத்தும் ஒரே இரவில் உருவாக்கப்பட்டு விடவில்லை. இருபது ஆண்டுகளில் படிப்படியாகப் பல்வேறு மாற்றங்களையும், போதனா முறைகளின் வாயிலாகவும் இந்தக் கல்வி முறையை பூடான் எட்டியது

## டெல்லி பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம்

கல்வி அறிவு பெற்றவர்களின் சதவிகிதம் இந்தக் காலகட்டத்தில் வியக்கத்தக்க வகையில் மிக வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது. இருந்த போதிலும் 2010ஆம் ஆண்டு மொத்த மக்கள் தொகையில் இரண்டில் ஒரு பங்கு மக்கள் மட்டுமே கல்வி அறிவு பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். 1983ஆம் ஆண்டு கிழக்கு பூடானில் தொடங்கப்பட்ட கல்லூரி, டெல்லி பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றது. 1998ஆம் ஆண்டு பூடான் அரசு சார்பில் 400 பள்ளிகள் நிறுவப்பட்டன. அவற்றில் சுமார் 150 தொடக்கப் பள்ளிகள் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் அமைக்கப்பட்டன. 188 வழக்கமான தொடக்கப் பள்ளிகள், 44 ஜூனியர் மேல்நிலைப் பள்ளிகள், 18 மேல்நிலைப் பள்ளிகள் ஆகியன உருவாக்கப்பட்டன. இத்தனைக்குப் பிறகும் பூடானில் கல்வி அறிவு பெறுவதற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்பட்டு வந்தது.

## வேகமாக வளர்ச்சி அடைந்த கல்வியறிவு

தற்போது பூடான் நாட்டில் உள்ள பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்ப நிலையங்கள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவேகமாக உயர்ந்து வருகிறது.

1994ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளிகளில் 60,089 பேர் பயின்றனர். அதே ஆண்டில் மேல்நிலைக் கல்வியில் 7,299 பேர் பயின்றனர். அப்போது ஆசிரியர் விகிதம் 42 பேருக்கு ஒருவர் என்ற நிலையில் காணப்பட்டது. தேசிய கல்வி வாரியத்தால் பாடத் திட்டங்களும் தேர்வுகளும் முறைப்படுத்தப்பட்டு 11ஆம் வகுப்பில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இங்கு ஆங்கிலத்திலும், பூடான் தேசிய மொழியான 'சோங்கா'விலும் (Dzongkha) பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

2000ஆம் ஆண்டில் பூடானில் வயது வந்தோருக்கான கல்வியறிவு விகிதம் 52.7 சதவிகிதமாக இருந்தது. அதில் ஆண்கள் 38.9 சதவிகிதம், பெண்கள் 66.4 சதவிகிதம்.

பூடானில் கல்வி என்பது கட்டாயமில்லை. கல்வி முறையானது மழலையர் வகுப்பு ஓராண்டு, அதைத் தொடர்ந்து 5 ஆண்டுகள் தொடக்கக் கல்வியையும், 3 ஆண்டுகள் ஜூனியர் மேல்நிலைக் கல்வியையும், அடுத்த 3 ஆண்டுகள் மேல்நிலைக் கல்வியையும் கொண்டுள்ளது.

## பன்னாட்டு உதவியுடன் பாடத் திட்டங்கள்

பாடத் திட்டங்கள், பாடப் புத்தகங்கள், தகுதித் தேர்வுகள் ஆகியவற்றை தேசியக் கல்வி வாரியம் முடிவு செய்கிறது. யுனெஸ்கோ, லண்டன் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியுடன் பாடத் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டது. பூடான் அரசு தனது பட்ஜெட்டில் கல்விக்காகவும், சுகாதாரத்துக்காகவும் 22 சதவிகித நிதியை ஒதுக்கிச் செலவிடுகிறது. ஆசிய வளர்ச்சி வங்கியும் பூடானின் கல்வி வளர்ச்சிக்கான நிதி உதவிகளைச் செய்து வருகிறது. மிகவும் மரபார்ந்த சமூகமான பூடான் நாடு நவீனக் கல்வியில் மெல்ல மெல்லத் தன்னை மேம்படுத்திக் கொண்டது.

-பிரியா



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# கணிதத்தை எளிமையாகக் கற்பிக்க சில உத்திகள்




மாணவர்கள் பெரும்பாலும் அஞ்சக்கூடிய பாடம் கணிதம்தான். மற்ற பாடங்களில் இருந்து கணிதம் சற்றே வேறுபட்டது. அதை எளிதாக மனப்பாடம் செய்து மதிப்பெண்களைப் பெற்றுவிட முடியாது. கணிதத்தைச் சரிவர கற்க நல்ல புரிதல் அவசியம். கணிதத்தை மாணவர்கள் நேசிக்கும் வகையில் சொல்லிக் கொடுக்க சில எளிய உத்திகள் உள்ளன. அவற்றைக் காண்போம்.

### விவாதத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல்

மாணவர்களைக் கேள்வி எழுப்பச் சொல்லி ஆசிரியர் உத்வேகமளிக்க வேண்டும். கேள்வி கேட்டால் ஆசிரியர் அடிப்பார் என்ற எண்ணம் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியான சூழலே விவாதத்திற்கு வழிவகுக்கும். கணிதத்தைப் புரிந்துகொள்ள மாணவர்களுக்குச் சிறிது காலம் தேவைப்படும். அந்த இடைவெளியில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து தேற்றும் காலமாக ஆசிரியர் பயன்படுத்த வேண்டும்.

### அதிகமான எடுத்துக்காட்டுகள்

புகைப்படங்கள், வீடியோக்கள் வாயிலாகக் கற்பிப்பது மாணவர்களின் கற்பனைத் திறனை வளர்க்கும். ஒரு தலைப்பின் கீழ் அதிகமான எடுத்துக்காட்டுகளோடு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவை மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் இருந்தால் சிறப்பானது.

### ஆயிரம் வழிகள் உண்டு

கணிதத்தைப் பொறுத்தவரை ஒரு கணக்குக்குத் தீர்வு காணப் பல்வேறு வழிகள் இருக்கும். அவை அனைத்தையும் மாணவர்களுக்குக் கற்பிப்பது அவசியம். எல்லா மாணவர்களும் ஒன்று போல் இருப்பதில்லை. எனவே அவர்களுக்கான வெவ்வேறு வழிகளைத் திறந்துவிட வேண்டும்.

### தர்க்கம் செய்வதைப் பாராட்டுங்கள்

கணக்குக்குத் தீர்வு காணும் வேளையில், அதில் வரும் சந்தேகம் காரணமாக மாணவர் உங்களிடம் தர்க்கம் செய்தால் அதைப் பாராட்டுங்கள்.

மாணவர்கள் கணிதத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவும், அதை விரும்பவும் தர்க்கம் செய்வது தேவையானது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

### வீட்டுப் பாடத்துடன் வகுப்பை நிறைவு செய்யுங்கள்

கணிதத்தைக் கற்க தொடர் பயிற்சி அவசியம் என்பது நீங்கள் அறிந்ததே. எனவே மாணவர்களுக்கு வீட்டுப் பாடத்தை வழங்குவது அவர்களுக்குப் பயனளிக்கும். நீங்கள் கொடுக்கும் வீட்டுப் பாடம் கடினமானதாக இருக்கக் கூடாது. மாணவர்கள் கருத்தை உள்வாங்கும் வண்ணம் இருக்க வேண்டும். இதனால் கணிதம் அவர்களுக்கு இணக்கமான பாடமாக மாறும்.

### கடினமானதை மெல்ல அறிமுகம் செய்யுங்கள்

கடினமான கணக்குகளைச் சொல்லிக் கொடுக்கும்முன், அது தொடர்பான எளிமையான கணக்குகளை முதலில் நடத்த வேண்டும். பின்னர் கடினமான பகுதியை அறிமுகப்படுத்த வேண்டும்.

### எதிர்மறை எண்ணங்களை அகற்றுதல்

கணிதம் மீது மாணவர்களுக்கு உள்ள அச்சம், அப்பாடத்தின் மீது எதிர்மறை எண்ணத்தை ஏற்படுத்தும். இதைக் களைய வேண்டியது ஆசிரியரின் கடமை. கணக்குப் போட சிரமப்படும் மாணவர்களிடம் அன்பாகப் பேசி, அவர்களை ஆற்றுப்படுத்துங்கள். இது அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்.

### முறையான தேர்வுப் பாதை

மாணவரின் முன்னேற்றம் குறித்து ஆசிரியர் அறிந்து வைத்திருப்பது அவசியம். இதற்கு முறையான தேர்வுகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்.


கணிதப் புதிர்கள், விவாதங்கள் என வெவ்வேறு முறைகளில் மாணவரின் வளர்ச்சி குறித்து நீங்கள் அறிந்துகொள்ளலாம். இதன்மூலம் தொய்வாக இருக்கும் மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது தனிக் கவனம் செலுத்தலாம்.

### ஆராய்ச்சி செய்யத் தூண்டுதல்

கணிதம் சார்ந்த குறிப்பிட்ட தலைப்புகளில் மாணவர்களை ஆராய்ச்சி மேற்கொள்ளச் செய்யலாம். அதில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து, ஆராய்ச்சி செய்வதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுங்கள். இதனால் மாணவர்களின் கற்பனைத் திறன் மேம்படும்.

### வேகம் வேண்டாம்

ஆசிரியர்களில் சிலர் பாடத் திட்டத்துக்கான தலைப்பை முடிக்க அவசரமாகக் கற்பிப்பார்கள். மாணவர்களுக்குக் கொடுக்கும் வீட்டுப் பாடத்தை தினமும் ஆசிரியர் திருத்த வேண்டும் என மாணவர்கள் எதிர்பார்ப்பர். அது தட்டிப்போகும்போது கணிதத்தின்



மீதான அவர்களின் ஆர்வத்தைக் குறைக்கச் செய்யும்.

வகுப்பறையில் தனித் தனியாக ஒவ்வொரு மாணவரிடமும் கலந்துரையாடுவது, கேள்வி கேட்பது தேவையானது. அப்போதுதான் மாணவர்கள் எந்த அளவு புரிதலில் இருக்கிறார்கள் என்பது தெரியும்.



### கணித விளையாட்டு

கணிதம் தொடர்பான பேச்சு, விளையாட்டுகளை உத்வேகப்படுத்த வேண்டும். இது மாணவர்களின் மனநலன், திறன்கள் வளர உதவியாக இருக்கும். இதனால் புது வகையான கற்றல் முறை, சிந்தனைச் செயல்பாடுகளை அவர்கள் பெறுகின்றார்கள். கைபேசி, கணினியில் பல்வேறு கணித விளையாட்டுகள் உள்ளன. அதை விளையாடும்போது, கணிதம் தொடர்பான வியூகம் வகுக்கத் தூண்டும்.

### மனப்பாடம் தவிர்க்கப்பட வேண்டும்

ஒவ்வொரு மாணவரும் கணிதத்தைக் கற்க தங்களுக்கென ஒரு வழிமுறையை வைத்திருப்பார்கள். சூத்திரங்களை மனப்பாடம் செய்யச் சொல்லி அவர்களை வற்புறுத்தாதீர்கள். கருத்தியல் புரிதலை, மன இணைப்பை ஏற்படுத்தும் பொறுப்பு ஆசிரியருடையது; இதை மனதில் கொண்டு செயல்படுங்கள்.

### பரிசளித்துப் பாராட்டுதல்

கணிதத்தில் மாணவர் முன்னேற்றம் அடைவது தெரிந்தால், பரிசு கொடுத்துப் பாராட்டுங்கள். வாரம் ஒரு மாணவனைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குங்கள். இந்த அங்கீகாரம் அம்மாணவனை இன்னும் சிறப்பாகச் செயல்படத் தூண்டும்.

– அ.பா.






Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# ஆசிரியர் பணியில் ஈடுபாடு இருக்க வேண்டும்!





Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

அதன்மூலம் என்னால் பல்வேறு உதவிகளைச் செய்ய முடிந்தது.


டெல்டா மாவட்டங்களை கஜா புயல் தாக்கியபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்காக, தீவிரமாகப் பணியாற்றினேன். புயலால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த ஐந்து மாணவர்களுக்கு நிதி திரட்டி வீடு கட்ட உதவினேன். சமூக வலைதளங்கள், நண்பர்களின் வாயிலாக நிதி உதவி பெற்று வழங்கியது மறக்க முடியாதது.

செஞ்சிலுவைச் சங்கத்தில் பெற்ற பயிற்சிகள், புயல் நேரத்தில் எனக்குப் பெரும் உதவியாக இருந்தன. புயல் தொடங்கும்போதே அத்தியாவசியப் பொருட்களைச் சேகரித்து வைத்துக்கொண்டேன். தினம் ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு உணவு வழங்கினோம். இப்படிப் பல்வேறு உதவிகளைச் செய்தேன்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் நம்மால் முடிந்த உதவிகளை மாணவர்களுக்குச் செய்து வருகிறோம். கொரோனா காலம் அதில் குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் குடும்பத்துக்கு, மளிகைப் பொருட்களை வழங்கினேன். மாணவர்கள் சரியாகக் கல்வி கற்க முதலில் அவர்கள் வயிறு நிறைய வேண்டும். எனவே, அதைக் கருத்தில் கொண்டு செயல்பட்டேன்.

என் சமீபத்திய செயல்பாடுகளில் நான் பெரிதாகக் கருதுவது, தினேஷ் என்ற மாணவன் உயிர் காக்க உதவியதுதான். ஜூலை 5ஆம் தேதி காலை 8.30 மணி, நான் பள்ளிக்குள் நுழைந்தபோது ஒருவர் ஓடி வந்து, "சார்! உங்க ஸ்கூல் பையன் டாரஸ் லாரி டயருக்குள்ள மாட்டிக்கிட்டான்" என்றார். பக்கத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருப்பதாகவும் சொன்னார். என் மனம் பதை பதைக்க ஆரம்பித்தது. வேகமாக மருத்துவமனைக்கு விரைந்தேன்.






Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





அடிபட்டது எங்கள் பள்ளி மாணவன் இல்லை. பக்கத்துப் பள்ளி மாணவன் தினேஷ். அந்த 11 வயதுப் பிள்ளையின் தலையைக் கோதியபடி "பயப்படாதே" என்றேன். அவனது வலது கையைக் கண்டேன். டயர் ஏறியதால் சதைகள் சேதமடைந்து இரத்தம் வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தது. உடனே முதலுதவி செய்து, பெற்றோருக்குத் தகவல் தந்து, கோவை கங்கா மருத்துவமனைக்குக் கொண்டு சேர்த்தோம். சக்கரம் ஏறிய காரணத்தால் வலது கை மற்றும் நெஞ்சு எலும்புகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தன. மருத்துவர்களின் கடின முயற்சியால் மாணவன் உயிர் காக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

அடித்தட்டு குடும்பத்தைச் சேர்ந்த அம்மாணவனின் மருத்துவச் செலவு பல லட்சங்களில் இருந்தது. சமூக வலைதள உதவியால் அம்மாணவனின் மருத்துவச் செலவுக்கு 10 லட்சம் ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்தேன். இது என்னால் மறக்க முடியாதது.

அதேபோல் நெகிழிக்கு மாற்றாக மஞ்சள் பையைப் பயன்படுத்த வேண்டும் என, அரசு அறிவிப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மாணவர்களுக்குத் துணிப்பை செய்யப் பயிற்சி வழங்கி அதில் வெற்றியும் பெற்றோம். இதையும் முக்கியமானதாகக் கருதுகிறேன்.

மாணவர்களை எந்நேரமும் பாடப் புத்தகத்துக்குள் தள்ளிவிடுவதில் எனக்கு விருப்பமில்லை. அவர்கள் அதைத்தாண்டி பல விஷயங்களைக் கற்க வேண்டும். அரசு தற்போது நாட்டுப்புறக் கலைகள் போன்ற கல்வி அல்லாத பிற விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. அது சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் பெரும் மகிழ்ச்சியாக இருக்கும்.



சமீப காலங்களாக மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்திருப்பது வருத்தமளிக்கிறது. சிறு அவமானங்களைக்கூட தாங்கும் மனநிலையில் இன்றைய மாணவர்கள் இல்லை. அவர்கள் புற உலகை விட்டு விலகி, தங்களுக்கென ஒரு கனவு உலகை அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள். முந்தைய தலைமுறை போல் வெளியில் சென்று விளையாடும் பழக்கம் குறைந்துவிட்டது. அவர்கள் உலகமே கைபேசியில் அடங்கிவிட்டது. அதனால் மனநல ஆலோசகர்களைப் பள்ளியில் நியமிப்பது அவசியம் எனக் கருதுகிறேன்.

தனியார் பள்ளியா? அரசுப் பள்ளியா? என்றொரு போக்கு நிலவி வருகிறது. எந்தப் பள்ளியாக இருந்தாலும் மாணவர்கள் அதைச் சரியாக உபயோகப்படுத்திக் கொண்டால், மேலே வர முடியும் என நம்புகிறேன். அதேபோல் ஆசிரியர்களுக்குத் தன் பள்ளிக் குழந்தைகளை முன்னேற்ற வேண்டும் என்ற ஈடுபாடு இருக்க வேண்டும். இன்று பல ஆசிரியர்கள் அப்படி இருந்து கொண்டிருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை" என்றார்.

- பாண்டியன்

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்
நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்
மாணவர்களே!
உங்களுக்கு ஏதாவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?
பள்ளிக் கல்வித் துறையின்
மாணவர் உதவி எண்
14417



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# உங்களிடமிருந்து...

'லீவு எடுத்தா சொல்லுங்க டீச்சர்' கட்டுரை நெகிழ வைத்தது. தொடர் விடுப்பு எடுக்கும்போது கற்றல் இடுபாடு இல்லாத மாணவர்களை நெறிப்படுத்த, அனைத்து ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதலாக அமைந்தது அந்த வகுப்பறை அனுபவம் பகுதி.

- **து. கனக அருண்,** இடைநிலை ஆசிரியர், ஊ.ஒ.தொ.பள்ளி, மாயமான்குறிச்சி, ஆலங்குளம் வட்டம், தென்காசி.

'அன்பு வாத்தியார்' சிறுகதையில், 'அவர் ஒரு லூசு சார்' என்று தொடங்கும் வரிகள் என்னைப் பதினோரு ஆண்டுகளுக்குப் பின்னோக்கி இழுத்துச் சென்றது. 2011ஆம் ஆண்டு நான் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொப்பூரில் பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் தினந்தோறும் என்னுடைய வகுப்பறைச் செயல்பாடுகள், இக்கதையில் வரும் ஆசிரியரைப் போலத்தான் இருக்கும். அதைப் படித்ததும் பழைய நினைவுகள் திரும்ப வந்தன.

- **ப.இன்பசேகரன்,** இ.நி.ஆ.,ஊ.ஒ.தொ.பள்ளி, பொடாரன் கொட்டாய், நல்லம்பள்ளி ஒன்றியம், தருமபுரி

மார்ச் - 2023 கனவு ஆசிரியர் இதழின் ஒவ்வொரு பக்கத்தையும் விரும்பிப் படித்தேன். பல்வேறு தனித்திறன் வாய்ந்த ஆசிரியர்களின் கற்பித்தல் அனுபவங்கள், கல்வி அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் நிரம்பியிருந்தன. மிக அற்புதமான எழுத்து நடையில் மிகச் சிறந்த தாளில் அச்சிட்டு அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும், கல்வியாளர்களும் படித்துப் பயனடையும் வகையில் இருக்கிறது.

- **மா. பழனி,** தலைமை ஆசிரியர், ஊ.ஒ.ந.பள்ளி, சின்னப்பள்ளத்தூர், பென்னாகரம் ஒன்றியம், தர்மபுரி.




'அன்பு வாத்தியார்' சிறுகதையை வாசிக்கும்போது, பள்ளிக்கூட காட்சிகள், நம் மனத்திரையில் ஓடுகிறது. வெறுமனே கற்பித்தலில் முழுமையான கற்றல் சாத்தியமாகாது. அதற்கான சூழலை உருவாக்கினால் மட்டுமே சாத்தியமாகும் என்பதை அழகாய் உணர்த்தியது.

-**க.பாலசந்தர்,** பட்டதாரி ஆசிரியர், அ.ஆ.மே.நி.பள்ளி, கடையநல்லூர், தென்காசி.

"டீச்சர், நான் உங்களைப் பார்க்கவும், படிக்கவும் பள்ளிக்கு வருகிறேன். நான் உங்களை மிகவும் தேடுகிறேன். லீவு போட்டா சொல்லுங்க டீச்சர்" என்ற வாசகம் ஆசிரியர்கள் மீது மாணவர்கள் வைத்திருக்கும் பாசம், மரியாதை, அன்பு ஆகியன கனவு ஆசிரியர் நூல் வாயிலாகத் தெரிகிறது. வெளியிட்ட கனவு ஆசிரியர் இதழ் சிறப்புடன் வளரட்டும்.

- **சீ.ராஜா** தலைமை ஆசிரியர் அ.உ.நி.பள்ளி, இலத்துவாடி, தலைவாசல் தாலுகா, சேலம்.

கனவு ஆசிரியர் இதழில் எனக்குப் பிடித்த பகுதி, 'ஆசிரியர் நூலகம்'. ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் வீட்டில் இருக்கும் நூலகம் பற்றியும் அதில் உள்ள புத்தகங்கள் பற்றியும் புத்தகத்தில் உள்ள தகவல்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைப்பதால், அதனை வாசிக்கும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் தங்கள் வீடுகளில் நூலகம் அமைக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

- **ஆர்.சாந்தி,** தலைமையாசிரியர், ஊ.ஒ.தொ.பள்ளி, வித்தானூர், திருப்புல்லாணி ஒன்றியம், இராமநாதபுரம்.

மாற்றுத்திறன் மாணவர்களுக்கான கற்பித்தல் உத்திகளை எடுத்துச் சொல்லும் 'எல்லோருக்குமான கல்வி' தொடர் மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. இந்த மாதம் வெளியான 'அமெரிக்காவின் கல்வி ஒரு வரலாற்றுப் பார்வை' கட்டுரை படிக்க மிகுந்த ஆர்வமாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது.

- **ஆர். புவனேஸ்வரி,** இடைநிலை ஆசிரியர், அங்கவை சங்கவை அ. ம. மே.நி.பள்ளி, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி

பெண் கல்வியை வலியுறுத்தும் 'அயலி' இணையத் தொடரைப் படித்தேன். மிகவும் சிறப்பாக எழுதப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில் பெண்கள் கல்வியைப் பெற எவ்வளவு போராடியிருந்தார்கள் என்பதை அந்தத் தொடரைப் பார்த்துப் புரிந்து கொண்டேன்.

- **கமலக்கண்ணன்,** உதவி தலைமையாசிரியர், அ.மே.நி.பள்ளி, மேலப்புலம், ராணிப்பேட்டை



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# முன்மாதிரியாக ஒரு போட்டி

**படப்பிடிப்பு - 1**

குண்டு எறிதல் போட்டி. எப்படி நின்றுகொண்டு குண்டைப் பிடித்து, எப்படி எறிய வேண்டும் என்று இயக்குநர் விளக்குகிறார். நடுவை சிரித்தபடியே, "டேய், நான் உடற்பயிற்சி இயக்குநர். இது எனக்கு நல்லா தெரிந்த விளையாட்டு. எனக்கே சொல்லித்தறியா?" என்கிறார்.

"பயமாயில்லை, நீங்க [illegible] பேசுங்க. நான் [illegible] [illegible]" என்கிறார் இயக்குநர்.

**படப்பிடிப்பு - 2**

சுற்றுலாவுக்கு வந்த நடுத்தர வயதுப் பெண் கதாநாயகியின் அம்மா போலவே இருக்கிறார். அவரிடம் "ஒரு காட்சியில் நடிக்க இயலுமா?" என்று இயக்குநர் கேட்கிறார். முதலில் மறுத்தவர், பள்ளி மாணவர்கள் குறும்படம் எடுக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியோடு ஒத்துக் கொள்கிறார். கதாநாயகி வடக்கு மாநிலத்திலிருந்து வந்தவர். அவர் அம்மா இந்தியில் அவரோடு பேச வேண்டும் என்று இயக்குநர் காட்சியை விவரிக்கிறார். "எனக்கு இந்தி தெரியாதே, தெலுங்குதான் தெரியும்" என்கிறார்.

**படப்பிடிப்பு - 3**

[illegible] காவலர்கள் [illegible] பள்ளி மாணவர்கள் குறும்படம் எடுக்கிறோம்" என்று [illegible] சொல்கிறார். [illegible] காவலர்கள் [illegible] படப்பிடிப்பைப் பார்க்க வருகிறார்கள்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





இவற்றை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தேன். இவை சிறார் திரைப்படத் திருவிழாவிற்காகக் குழந்தைகளே எடுத்த குறும்படங்களின் படப்பிடிப்புத் தளங்களில் நிகழ்ந்தவை. அங்கிருந்த இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என அனைவருமே அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்.

வெற்றி பெற்ற ஒரு சிலரைத் தவிர ஏராளமானவர்களை வருத்தச் செய்வதே போட்டிகளின் விளைவாக இருக்கிறது. திறன்களை மேடையேற்றும் விதமாக ஜனநாயகத் தன்மையுடன் போட்டிகளை நடத்த வேண்டும் என்பதே என் நீண்ட நாள் ஆசை. அப்படி ஒரு முன்மாதிரி நிகழ்வில் நானும் பங்கு பெற்றதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

அரசுப் பள்ளிகளில் மாதம் ஒரு சிறார் திரைப்படம் திரையிடப்படும் என்ற அறிவிப்பே இதை [illegible]

[illegible]

ஆனால் இம்முறை புதிய மாற்றங்கள் காத்திருந்தன.

மாநில முழுவதிலும் இருந்து 100க்கும் மேற்பட்ட குழந்தைகளும் வழிகாட்டி ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். மாநிலப் போட்டிகள் என்ற பெயர் மறைந்து சிறார் திரைப்பட விழா என்பதிலிருந்து மாற்றம் தொடங்கியது.

5 நாட்கள் விழா. மாணவர்களின் 10 குழுக்கள். 4 நாட்களில் திரைப்படங்களைப் பார்த்தல், கலந்துரையாடல், திரைக்கதை எழுதுதல், இயக்கம், ஒளிப்பதிவு என ஏராளமான பயிற்சிகள்.

[illegible]



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com




# கதை சொன்னால் நூல் பரிசு

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் கருமணிதான் என் சொந்த ஊர். 5ஆம் வகுப்பு படிக்கும்போது, தினசரிகளின் இணைப்பாக வரும் சிறுவர் இதழ்கள்தான் முதலில் எனக்கு அறிமுகமாயின. 7ஆம் வகுப்பு படிக்கும்போது வீட்டில் அம்மா படிக்கும் ஆனந்த விகடன், கல்கண்டு போன்ற இதழ்களையும் வாசிக்க, மாத நாவல்கள் போன்றவற்றையும் படிக்கத் தொடங்கினேன்.

8ஆம் வகுப்பிற்குப் பிறகு, விடுதி வாசம். அங்கு காலைப் பொதுக் கூட்டத்தில் கேட்கப்படும் பொது அறிவு வினாக்களுக்குப் பதில் கூறுவதற்காகத் தினசரிகளைப் படிக்க ஆரம்பித்தேன். இதன் விளைவாக, 8ஆம் வகுப்பில் தேசிய திறனாய்வுத் தேர்வில் வெற்றிபெற்றேன்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் படிக்கும்போது குறிஞ்சி மலர், பொன்னியின் செல்வன் போன்ற நாவல்கள் அறிமுகமாயின. ஒருபக்கமே பொது அறிவுச் செய்திகளையும் படித்துக்கொண்டே இருந்ததால், ஆசிரியர் பயிற்சியில் படித்தபோதே, குரூப் IV இரண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றேன்.

இராமநாதபுரம் மாவட்ட மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக வேலை கிடைத்தது. எங்கள் கிராமத்தில் 'வளரும் வாசகர்' என்ற பெயரில் 7 பேர் 7 வாரப் பத்திரிகைகளை வாங்கி எங்களுக்குள் பரிமாற்றம் செய்துகொண்டு படிப்போம்.

திருமணத்திற்குப் பிறகு, ஆசிரியப் பணியில் சேர்ந்தேன். எனது கணவர் வீட்டில் ஒரு புத்தக அலமாரி இருந்தது. அதில் நிறைய கட்டுரைப் புத்தகங்கள் இருந்தன. பணி மாறுதலில் நானும் கணவரும் ஒரே ஊரில் வேலை பார்க்கும்போது ஒரு சிறிய ஓட்டு வீட்டில் குடியிருந்தோம். அந்த வீடு முதலில் குடோனாக இருந்ததால் அலமாரி இல்லை. பொருட்களைப் பெட்டியில் வைத்துக் கட்டிலுக்கு அடியில் வைத்திருப்போம். எனது கணவர் வேலியிருந்து இரண்டு கம்பிகள் எடுத்து ஒரு பலகையைக் கட்டி அதில் புத்தகங்களை அடுக்கிவைத்திருந்தார். அதுவே எங்கள் முதல் நூலகம். நேரம் கிடைக்கும்போதெல்லாம் நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன். இலக்கிய நூல்கள், மாத இதழ்களைப் படிக்க ஆரம்பித்தேன்.

புதிய வீடு கட்டும்போது நூலகத்திற்குத் தனி அறை அமைத்தோம். என் கணவரும் நிறைய நூல்களை



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வாசிப்பவர். புத்தகக் கண்காட்சி நடக்கும்போதெல்லாம் நிறைய நூல்களை வாங்குவோம்.

வளரிளம் பருவத்தில் உள்ள என் மாணவ, மாணவிகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களுக்கு ஏற்படும் உளவியல் பிரச்சினைகளைத் தீர்க்கவும், குழந்தைகளை அவர்கள் நிலையில் இருந்து புரிந்து கொள்ளவும், வகுப்பறையை எளிதாகக் கையாளவும் கல்விசார்ந்த புத்தக வாசிப்பு பேருதவியாக இருக்கின்றது.

'எங்களை ஏன் டீச்சர் பெயிலாக்கினீங்க?' என்றொரு நூலைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இத்தாலியில் உள்ள மலைப்பகுதிகளில் ஒன்று பர்பியானா. அங்கே இருபது முப்பது வீடுகள் கொண்ட குடியிருப்புப் பகுதி ஒன்று உள்ளது. அங்கே ஒரு பள்ளியை நிறுவுகிறார் பாதர் மிலானி. அதில் பலர் கல்வி கற்கின்றனர்.

அது ஒரு வித்தியாசமான பள்ளி. அந்த பர்பியானா பள்ளிக்கு வருவதற்கு முன் வேறு பள்ளியில் பயின்று தேர்ச்சி பெறாத, படிப்புக்கும் பள்ளிக்கும் லாயக்கற்றவர்கள் என்று வெளியேற்றப்பட்ட எட்டு மாணவர்கள் பார்பியானா பள்ளிக்கு வந்து கற்கின்றனர். அவர்கள் எட்டு பேரும் சேர்ந்து, தாங்கள் முன்பு பயின்ற பள்ளியின் ஆசிரியைக்கு, 'எங்களை ஏன் டீச்சர் பெயிலாக்கினீங்க?' என்று கேள்வி கேட்டு எழுதிய நூல் அது ஓராண்டில் எழுதி முடிக்கப்பட்ட 'Letter to a teacher' என்கிற ஆங்கில நூலின் தமிழ் வடிவம் இந்த நூல். இதைப் படித்ததும் எனக்குள் ஏற்படுத்திய கேள்விகள் ஏராளம்.

ஆசிரியப் பணியை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் இதுபோலக் கல்விச் சிந்தனைகள் சார்ந்த பல நூல்கள் உள்ளன. அவற்றைத் தொடர்ந்து படிப்பது என்பது ஆசிரியப் பணியில் நம்மை நாமே புதுப்பித்துக்கொள்ள உதவும்.

**சட்டென நினைவுக்கு வரும் சில நூல்களின் பெயர்களை இங்கே பகிர்கிறேன். எனக்குரிய இடம் எங்கே? கனவு ஆசிரியர், டோட்டோசான், கற்க கசடற, பகற்கனவு, என் சிவப்பு பால்பாயிண்ட் பேனா, தமிழகத்தில் கல்வி, கரும்பலகைக்கு அப்பால், சீருடை, ஆசிரிய வாழ்வினிது, ஆசிரியரின் டைரி போன்றவை என்னை வெகுவாகக் கவர்ந்தவை.**

எங்களுக்கு இரண்டு மகன்கள். இருவரும் புத்தக வாசிப்பில் ஆர்வமுடன் உள்ளனர். மூத்த மகன் சக்தி, பத்தாம் வகுப்பு முடித்து மாற்றுச் சான்றிதழ் வாங்கச் சென்றபோது நூலகத்தில் எடுத்த புத்தகங்களைத் திருப்பித்தர வேண்டும் என்று நிறைய புத்தகங்களை எடுத்து வந்தான். பள்ளிக்குச் சென்றால் அங்கே ஏழு மாணவர்களின் பெற்றோர் இவனுக்காகக் காத்திருந்தனர். என்னவென்று விசாரித்தபோது, விடுமுறையில் படிக்க பள்ளி நூலகத்தில் ஒருவருக்கு ஐந்து புத்தகங்கள் மட்டுமே கொடுத்திருக்கிறார்கள். இவன் தனது நண்பர்கள் ஏழு பேரின் கணக்கிலும் புத்தகங்களை வாங்கியிருக்கிறான். அவற்றைத் திருப்பித் தந்த பிறகே மாற்றுச் சான்றிதழைத் தருவார்கள் என்பதால் அனைவரும் இவனுக்காகக் காத்திருந்தனர். அந்த மாணவர்களின் பெற்றோரும் காத்திருந்ததற்காகக் கோபப்படாமல் மகனைப் பாராட்டினார்கள். அது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

என் சின்ன மகன் வான்கா, பள்ளி நூலகத்தில் அதிக நூல்களை எடுத்துப் படித்ததற்காகப் பரிசு பெற்றவன்.

எப்படி, எதைப் படிக்க வேண்டும் என்று இருவருக்கும் தெரிந்திருக்கிறது. எவ்விதத் தனிப் படிப்பு, பயிற்சி நிறுவனத்திலும் சேராமல் தாங்களாகவே நுழைவுத் தேர்வு எழுதி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த INI உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

பள்ளியில் தினமும் காலைக்கூட்டத்தில், ஏதாவதொரு நூலில் உள்ள கதைகளைக் கூறுவேன். அதுபோலவே, படித்த நூல்களில் இருந்து கதை சொல்லும் மாணவ, மாணவியருக்குப் புத்தகங்களைப் பரிசளிப்பேன்.

மாணவ, மாணவியர் படித்த கதைகளைக் குரல் பதிவின் மூலம் பெற்றோர் குழுவில் பகிர்கிறேன்.

சென்ற வருடம் டிராமா செல்வம் என்பவர் உதவியுடன் கதைகளை நாடகப் பயிற்சி வாயிலாக நாடகமாக்கினோம்.

கடந்த மூன்று புத்தகக் கண்காட்சிகளில் பாரதி புத்தகாலயம் சிறுவர் நூல்களை வெளியிடும்போது புத்தக அறிமுகம் செய்து வெளியிடும் வாய்ப்பை எங்கள் மாணவ, மாணவியர் பெற்றார்கள். அழகாகப் பேசி அவர்கள் அறிமுகம் செய்தனர்.

படிக்கும் ஆர்வத்தை வளர்த்தால் சிந்தனை வளரும். தெளிவான அறிவு, திட்டமிடல், அறம் வளரும். அவர்களுக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுக்கும் தெளிவான அறிவு பிறக்கும் என்பது எனது அனுபவம்.

– **சு. செந்தாமரைச்செல்வி**, பட்டதாரி ஆசிரியர்,
மதுரை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, மதுரை

ஆசிரியர்களே!


**உங்கள் வீட்டில் நீங்களும் நூலகம் அமைத்துள்ளீர்களா? அந்த நூலகம் அமைக்கும் எண்ணம் எப்போது வந்தது, உங்கள் சேமிப்பில் உள்ள நூல்களில் மிக முக்கியமானதாகக் கருதும் நூல்கள் பற்றியெல்லாம் சுவாரஸ்யமாக எழுதி அனுப்புங்களேன்!**

**'எனது நூலகம்', கனவு ஆசிரியர், மாத இதழ்**
**8வது தளம், ஈ.வி.கே.சம்பத் மாளிகை,**
**பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,**
**கல்லூரிச்சாலை, சென்னை – 6**



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com






Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## வாழ்வில் முன்னேற

# கல்விதான் சரியான பாதை

"கல்வி ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை. அவ்வுரிமை யாரொருவருக்கும் மறுக்கப்படலாகாது. ஒரு மனிதன் தனது இருப்பு, செயல் திறன், ஆற்றல் ஆகியவற்றைக் குறித்து சரியாகப் புரிந்துகொள்ள கல்வி மட்டுமே உதவும்."

- பாரதரத்னா டாக்டர் **பி.ஆர்.அம்பேத்கர்**



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# எல்லோருக்காகவும் வாழ்ந்த ஆசிரியர்

அமெரிக்காவில் உள்ள எல்லா நடைபாதைகளும் சக்கர நாற்காலிகள் செல்லும் வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும் (Complete Street). எல்லா பள்ளிகளும் கல்லூரிகளும் உணவகங்களும் திரையரங்குகளும் சக்கர நாற்காலிகள் இலகுவாக உருண்டோட சாய்தள வசதிகள் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லை எனில் சட்டப்படி குற்றம்.

விமானங்களாகட்டும் ரயில்வண்டிகளாகட்டும் பேருந்துகளாகட்டும் எல்லாவற்றிலும் சக்கர நாற்காலிகள் உள்நுழைய சீரமைக்கப்பட்ட இணைப்புகள் உண்டு. இவ்வாறான மாற்றங்கள் சாதாரணமாகக் கிடைத்துவிடவில்லை. இதற்காகத் தன் ஒரு பெண்ணாக முன்னின்று போராடிக் கொண்டிருந்தவர்தான் ஜூடித் ஹூமென் (Judith Heumann).

போலியோ நோயால் பாதிக்கப்பட்டு நடக்கும் சக்தியை இழந்த தன் ஐந்து வயது மகளைப் பள்ளியில் சேர்க்கச் சென்றார் எல்சா ஹூமென் என்ற பெண்மணி. சக்கர நாற்காலி தீ விபத்துக்குக் காரணமாகும் எனக் கூறி அச்சிறுமியைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ள மறுத்திருக்கிறார்கள். அன்னையாகத் தன் இயலாமையை நினைத்து வருந்தி வீட்டிலேயே மகளை வைத்துக்கொள்ளாமல் நீதிமன்றத்தின் உதவியை நாடினார் எல்சா. நான்கு வருடப் போராட்டத்தில் அவருக்கு நீதி கிடைத்தது. ஆம், அச்சிறுமிக்கு 9ஆம் வயதில் பள்ளிக்குச் செல்ல அனுமதி கிடைத்தது.

பள்ளிப் படிப்பை முடித்ததும் பேச்சு மொழி பயிற்சிப் (Speech language pathology) படிப்பை முடித்தார். எல்லோரும் பயிற்சியாளராகப் பணியாற்றச் சொன்னபோதும் பிடிவாதமாக ஆசிரியராக விருப்பம் தெரிவித்தார் ஜூடித். படித்த நியூயார்க் பள்ளியிலேயே பணிக்கு விண்ணப்பித்தார். இம்முறை, சக்கர நாற்காலியில் இருக்கும் ஆசிரியையால் ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்தால் வேகமாகச் சென்று மாணவர்களைக் காக்க முடியாது என்று நிராகரிக்கப்பட்டார்.

நடக்கிற ஆசிரியைகளைவிட என்னால் வேகமாக முன்னேற முடியும் எனக் கூறி ஜூடித் நீதிமன்றம் சென்றார். கூடவே ஊடகங்களின் உதவியையும் நாடினார். மாற்றுத்திறனாளியான [illegible] நாட்டையே [illegible]



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஆனால் ஒரு மாற்றுத்திறனாளி ஆசிரியையாக முடியாது எனப் பத்திரிகைகள் எழுதின. நீதி கிடைத்தது.

முதன்முதலாகச் சக்கர நாற்காலியில் அமர்ந்து ஆசிரியையாகப் பணிபுரியும் உரிமையைப் பெற்றார் ஜூடித். அதன் பின் பலர் அவரைத் தொடர்புகொண்டு தங்களின் துயரங்களை எழுதினர். அப்போதுதான் Disabled in Action என்ற இயக்கத்தை ஆரம்பித்தார் ஜூடித். ஆசிரியையாகப் பணியாற்றிக்கொண்டே தன்னைப்போன்ற பலரின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து போராட ஆரம்பித்தார்.

அதில் ஒன்று மாற்றுத்திறனாளிகளுக்குப் பாகுபாடு காட்டப்படுவதற்கு எதிராக ஒரு சட்டம் வேண்டும் என்று போராடினர். மாற்றுத்திறனாளிகளுக்கான குரல் ஓங்கி ஒலித்ததன் விளைவாக அப்போதைய அதிபர் நிக்ஸன், மறுவாழ்வு Rehabilitation Act சட்டத்தில் 1973இல் கையொப்பம் இட்டார். மாற்றுத்திறனாளிகளின் திறன்களில் உள்ள தடைகளைவிடச் சமூகம் அவர்களை அங்கீகரிப்பதிலும் ஏற்றுக்கொள்வதிலும்தான் நிறைய தடை இருக்கின்றன என நம்பினார் ஜூடித்.


அதே போல ஓர் உரிமைப் போராட்டத்தில் ஜூடித்தின் தலைமையில் எண்ணற்றோர் கலந்துகொண்டு அமெரிக்க அரசு அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அரசு இதைச் சாதாரணமாக எடுத்துக்கொண்டது. ஆனால் உணவு, மாற்று உடை எதுவும் இன்றி 25 நாட்கள் [illegible] அரசு அலுவலகத்தின் உள்ளே இருந்தனர். எந்த ஒலி அமைப்பும் இல்லாதபோதும் மாற்றுத்திறனாளர்கள் தங்களுக்குத் தெரிந்த சைகை மொழியின் வாயிலாக சன்னல்களின் வழியாக வெளி உலகத்துடன் பேசினர். இடைவிடாத இப்போராட்டத்தின் பலனாக மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுச் சட்டத் திருத்தம் செக்ஷன் 504இல் அன்றைய அதிபர் கார்ட்டர் கையொப்பமிட்டார். அதில் உள்ள திருத்தத்தின்படி அனைத்துப் பொது தங்குமிடங்கள், வேலை வாய்ப்பு இடங்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் மாநில உள்ளூர் அரசாங்கத் திட்டங்களுக்கான அணுகல் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளிடம் பாகுபாடு காண்பது சட்டப்படி குற்றமாகும். அவை தண்டனைக்குரியதாகக் கருதப்படும் எனக் கூறப்பட்டது. பிறகு முழுமையான அமெரிக்க மாற்றுத்திறனாளிகள் நலச் சட்டத்தில் முன்னாள் அதிபர் புஷ் ஜூடித்தின் முன்னிலையில் 1990ஆம் ஆண்டு கையொப்பமிட்டார்.

முன்னாள் அதிபர் கிளிண்டன், ஜூடித்தை கல்வித் துறையின் உயர் துணை அமைச்சராகப் பதவியில் அமர்த்தினார். ஓர் ஆசிரியையாகத் தன் பணியை ஆரம்பித்த ஜூடித் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குப் பள்ளியில் படிக்கப் பல வசதிகள், கற்றல் குறைபாடுள்ள மாணவர்களுக்குப் பல வசதிகள் எனப் பல முக்கிய சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.



முன்னாள் அதிபர் ஒபாமாவின் அமைச்சரவையில் இருந்த ஹிலாரி கிளிண்டன் உதவியுடன் இந்தப் பணிகளைச் சர்வதேச அளவில் எடுத்துச் சென்றார். இன்று [illegible] நாடுகளில் இதே போன்ற சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர உதவி செய்தார் ஜூடித்.

இன்று அமெரிக்காவில் எந்தவொரு சாலையாக இருந்தாலும் அது சக்கர நாற்காலிகள் செல்லும் வண்ணம் வடிவமைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நிறுவனங்களும் மாற்றுத்திறனாளிகளின் சக்கர நாற்காலிகள் செல்ல ஏதுவாகச் சாய்வுதளங்கள், மின்தூக்கிகள், சிறப்புக் கழிவறைகள், கூடிய [illegible] நாற்காலிகள் போடப்படும் இடங்களிலும் கூட சக்கரநாற்காலியில் அமரும் வசதி செய்திருக்க வேண்டும். மேலும் ஒட்டப்படும் அறிவிப்புகள் சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பவர்களின் கண் பார்வைக்கு ஏற்ற உயரத்தில்தான் ஒட்டப்பட்டிருக்க வேண்டும் போன்ற பல திருத்தங்கள் இன்று சட்டமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.



அமெரிக்காவில் சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் இன்று சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துகிறார்கள். இதற்காக ஆகும் செலவைக் காப்பீடு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. ஏழை எளியவர்கள் அரசாங்கத்தின் உதவியோடு இலவசமாகச் சக்கர நாற்காலியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒருவரின் நடமாட்டம் முடக்கப்படுவதால் அவரின் உரிமைகள் பறிக்கப்படுதல் கூடாதல்லவா!

மாணவியாகப் போராடத் தொடங்கி, ஆசிரியராக, கல்வித்துறை அதிகாரியாக உயர்ந்தும் பல கோடி மாணவர்களின் நலனுக்காகப் போராட உழைத்த ஜூடித் 2023 மார்ச் 4ஆம் தேதி காலமானார். மாற்றுத்திறனாளிகளுக்காகச் சிறப்பாகப் பணிபுரிந்த ஜூடித், அமெரிக்க வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றுப் பக்கங்களிலும் ஜொலிப்பார்.

- மருத்துவர் பத்மா அர்விந்த்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





# பேச்சாளர்களை அறிமுகப்படுத்திய என் பள்ளி

**- பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா**

**மதுரையைச் சொந்த ஊராகக் கொண்ட பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா வங்கிப் பணியில் இருந்தவர். பட்டிமன்றங்களின் மூலம் சிறந்த பேச்சாளராகப் புகழ்பெற்ற இவர் தன் பள்ளிக் கால அனுபவங்களையும் தன்னைக் கவர்ந்த ஆசிரியர்கள் பற்றியும் இங்கே பகிர்ந்துகொள்கிறார்.**

மதுரை நகரத்திலிருந்து பத்து கி.மீட்டர் தொலைவில் இருக்கிற துவரிமான் கீழமாத்தூரில் உள்ள பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தேன்.

என் அப்பாதான் அங்கே தலைமை ஆசிரியர். ஒன்றாம் வகுப்பு ஆசிரியர் என் அம்மா; 2ஆம் வகுப்பு ஆசிரியர் என் தாய் மாமன். மூன்றாம் வகுப்பு வேறொரு ஆசிரியரிடம் படித்தேன். இப்படியான குடும்பச் சூழ்நிலையில் படித்த என்னை மதுரையில் இருக்கும், அரசு உதவி பெறும் தமிழ்வழிப் பள்ளியான புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பில் சேர்க்க அழைத்துப் போனார் என் அப்பா.

அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் இமானுவேல் என்பவர். "அதெல்லாம் சேர்க்க முடியாது" என்றார். என் அப்பாவோ, "தகுதித்தேர்வு வைத்து அதில் என் மகன் தேர்ந்தால் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்றார்.

"கிராமத்துப் பையனையெல்லாம் சேர்த்தால் எங்கள் பள்ளியின் தரம் என்னாவது" என்றார் அவர்.

"ஒரு முறை முயற்சியுங்கள். எங்க கிராமத்திலிருந்து மூணு நாலு பசங்க வர்றாங்க" என்றார் அப்பா.

நான் ஆறாம் வகுப்புக்கும் என்னோடு இன்னொரு மாணவர் 8ஆம் வகுப்புக்கும் தகுதித்தேர்வு எழுதினோம். இப்படி நூற்றுக்கணக்கானவர்கள் எழுதியதில், நான் ஆங்கிலத்திலும் கணக்கிலும் முதல் மதிப்பெண் பெற்றேன்.

இப்போது இமானுவேல் சார் "உங்கள் பையனைச் சேர்த்துகிறேன்" என்றதும் என் அப்பா, "இல்லை வேண்டாம்" என்றார். அவர், "ஏன்?" எனக் கேட்டார். "நீங்க முதல்ல கிராமத்துப் பையன் வேண்டாம்னு சொன்னீங்க இல்ல. இவன் இவ்வளவு நல்லா எழுதுறான்ல வேற பள்ளியில சேர்த்துக்கிறேன்" என்றார்.


அந்தத் தலைமை ஆசிரியர் ரொம்ப நல்ல மனிதர். பள்ளியைக் கட்டுக்கோப்பாக நடத்திவந்தார். "இல்லை ஐயா. இவன் இங்கேயே படிக்கட்டும்" என்றார். "அப்ப ஒன்று செய்யுங்கள். இவன் சின்ன பையனா இருக்கான். இவன் கூட துணையா வர்றதுக்கு எங்க கிராமத்துப் பையனை எட்டாம் வகுப்புக்குச் சேர்த்துக்கிட்டீங்கன்னா இவனையும் இங்கேயே சேர்த்துக்கிறேன்" என்றார் அப்பா.

ஏனென்றால் எட்டாம் வகுப்புக்கு நுழைவுத் தேர்வு எழுதின மாணவன் குறைவான மதிப்பெண்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





பள்ளி இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றபோது.

பெற்றிருந்தான். அவனுக்கு இடம் தர மறுத்திருந்தார். தலைமையாசிரியரிடம் இப்படி பேரம்பேசி, என்னை அந்தப் பள்ளியில் சேர்த்தார் என் அப்பா.

ஜெயராஜ் என்று ஒரு ஆசிரியர். ரொம்ப அருமையான ஆசிரியர். வகுப்பறையில் ஒரு சின்ன மேடை இருக்கும். அதற்கு மேல்தான் சேர் போடப்பட்டிருக்கும். அதில்தான் அமர்ந்து பாடம் நடத்துவார். எங்கள் வகுப்பில் நானும் தேவதாஸ் என்கிற மாணவனும் பாடத்தைப் பற்றி எதைக் கேட்டாலும் உடனே சொல்லிவிடுவோம். போர்டில் ஏதாவது எழுதிப் போடச் சொல்வார். அதனால் நாங்க, அவருக்கு ரொம்ப விரும்பமான மாணவர்கள். தன் நாற்காலிக்கு அருகிலேயே எங்களை உட்கார வைத்துக்கொள்வார்.

ஒருமுறை ஏழாம் வகுப்புப் படிக்கும்போது பள்ளியின் சார்பாக எங்களை ஊட்டிக்குச் சுற்றுலாவுக்கு அழைத்துப் போனார்கள். ஜெயராஜ் ஆசிரியர் எங்களுடன் வந்தார். எங்கள் ரெண்டு பேருக்கும் போனதிலிருந்து திரும்பி வரும் வரை சாப்பாடு, தேநீர், சிற்றுண்டி என அனைத்தையும் அவரே வாங்கித் தந்தார். அன்றைய காலத்தில்தான் மிகச் சொற்ப வருமானத்திலும் மாணவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று அவர் நினைத்தது ஆச்சர்யமான விஷயம்.

கணபதின்னு ஓர் ஆசிரியர். அமிர்தம்னு இன்னொரு ஆசிரியர். இவர்கள் எல்லாம் மொழிப் பாடம் நடத்துவதில் ரொம்ப ஆர்வம் எடுத்துச் சொல்லித் தந்தார்கள்.

அந்தப் பள்ளியில்தான் நான் முதன்முறையாக மேடையில் பேசுகிறவர்களைச் சந்தித்தேன். ஆண்டுக்கு இரண்டு தமிழ் இலக்கிய மன்றக் கூட்டங்கள் எங்கள் பள்ளியில் நடக்கும். வெளியிலிருந்து ஆசிரியர்கள், பேராசிரியர்கள், தமிழறிஞர்கள் எல்லாரையும் அழைத்துவந்து பேச வைப்பார்கள். கவனித்தல் என்பதையும், பெரிய மனிதர்கள் பேசுவதையும் அப்போதுதான் கேட்டேன்.

1968ஆம் ஆண்டு தொடங்கி மெல்ல வளர்ந்த பள்ளி அது. நாங்களும் அந்தப் பள்ளியோடு வளர்ந்து வந்தோம்.

பதினோராம் (அப்போது SSLC) வகுப்பு நிறைவுத் தேர்வில் நான் பள்ளியில் முதல் மாணவனாக வெற்றி பெற்றேன். விருப்பப் பாடத்தில் (சரித்திரம்) மாவட்ட அளவில் முதல் மாணவனாகத் தேர்வு பெற்றேன். தமிழாசிரியர் கழகத் தேர்வு என்று ஒன்று உண்டு. அதில் தேர்வு பெற்று வெள்ளிக் கோப்பை வாங்கினேன். இதனால் Roll of honor என்று அந்தப் பள்ளியில் என் பெயர் எழுதியிருக்கிறது.

அந்த வழியாகப் போகும்போதெல்லாம் இந்தப் பள்ளியில்தான் நான் படித்தேன் என்று பெருமைப்பட்டுக் கொள்வேன். பள்ளிக்கும் சில முறை போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். ஒரு முறை தலைமை ஆசிரியர் இமானுவேல் பள்ளிக்கு வந்திருந்தார். அப்போது அவருக்குக் கண் பார்வை இல்லை. (இப்போது அவர் அமரர்). நான் அவரிடம் "ஐயா, நான் உங்ககிட்டதான் படிச்சேன்" என்றேன். "பேரச் சொல்லுடா" என்றார்.

பெயரைச் சொன்னவுடனே கொஞ்ச நேரம் யோசித்தவர், "அண்ணன் தம்பி மூணு பேரும் கிராத்திலிருந்து வருவீங்களேடா... ஒவ்வொரு நாளும் தாமதமா வருவியே நீ" என்றார். அவர் சொன்னவுடனே கண்ணீரே வந்துவிட்டது. (நானும் என் தம்பிகளும் பள்ளிக்குப் பொதுப் பேருந்தில் போவதுதான் வழக்கம். அதனால் தாமதமாகவே பள்ளிக்குச் செல்வோம்.) அவர் எத்தனை மாணவர்களைப் பார்த்திருப்பார்? இவ்வளவு வயது முதுமையிலும் பார்வையில்லாத நிலையிலும் பேரைச் சொன்னதும் கேட்டுவிட்டு, நினைவில் கொண்டுவந்து சொன்னது எனக்குப் புல்லரித்துப் போனது.

என்னைப் பொறுத்த அளவில் பெற்றோரைவிட ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் பெரிய பங்கு வகிப்பது நல்ல பள்ளியும் ஆசிரியர்களும் தான். பெற்றோர்களுக்கு ஆசைப்பட மட்டுமே தெரியும். ஆனால் வழிநடத்த ஆசிரியர்களால் மட்டுமே முடியும் என்பது என் கருத்து.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

# கோடை விடுமுறை எப்படித் திட்டமிடலாம்?!

கோடை விடுமுறை என்றாலே குழந்தைப் பருவம் முதலே ஓர் உற்சாகம் வந்துவிடும். எந்தக் கவலையும் இன்றி எந்த நினைப்பும் இன்றி வாழ்ந்தது ஒரு காலம். உடலுக்கும் மனத்திற்கும் ஓய்வு மிகவும் அவசியம். அது புத்துணர்ச்சியைக் கொடுக்கும். மீண்டும் இன்னும் வேகமாக ஓட வேண்டும் அல்லவா?



இந்தக் கோடை விடுமுறையை ஆசிரியர்களாகிய நீங்கள், பயனுள்ளதாக மாற்றிக்கொள்ளச் சில யோசனைகள்.

## அசை போடலாம்!

கடந்த கல்வி ஆண்டில் திட்டமிட்டவை எவையெவை, அவற்றில் நிகழ்த்தியவை, தனி நபராக / கூட்டாக நடத்தியவை என ஒவ்வொன்றாக மெல்ல அசை போடுவது முக்கியம். அதன் வெற்றி, சறுக்கல்கள் பற்றிய சிந்தனைகளைத் துளிர்விடச் செய்வது மிக அவசியம். சில நிகழ்வுகளைச் சரியாகத் திட்டமிட்டு செய்திருப்பீர்கள். சிலவற்றில் அவசரமாகச் சில முடிவுகளை எடுத்து செயலிலும் இறங்கி இருப்பீர்கள். அவற்றை எல்லாம் அசைபோடுவது அவசியம்.



## மறு ஆய்வு

இது வேறு யாருடனும் அல்ல. நமக்கு நாமே இந்த ஆய்வினைச் செய்தால் போதும். கடந்த ஆண்டு மேற்கொண்ட நடவடிக்கைகள், கற்றல் முயற்சிகள், பள்ளிக்குள் நடந்த புதிய முயற்சிகளால் என்ன மாற்றம் நிகழ்ந்தது. உண்மையில் நிகழ வேண்டிய மாற்றம் நிகழ்ந்ததா அல்லது பெயரளவிற்கு மட்டும் அது ஒரு சம்பிரதாயமாக நடந்ததா என்று பார்க்கவேண்டும். சில விஷயங்கள் நம் கையை மீறி இருக்கும்; நமது கட்டுக்குள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் நம் கட்டுக்குள் இருப்பதையும் பிறரால் எனத் தப்பித்துக் கொள்வோம். அந்தப் புள்ளிகளை எல்லாம் சேகரித்து சுய ஆய்வின் முடிவில் திரட்டுவோம். வெறும் மனத்தில் ஆய்வு நடத்தாமல் ஒரு தாளில் இதனை எழுதிப் பார்த்தால் நமக்குள் பல நல்ல மாற்றங்களுக்கு வித்திடும்.

## வலுப்படுத்தல்

அடுத்த கல்வி ஆண்டில் என்னென்ன புதிய முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்ற பட்டியலைத் தயாரிக்க வேண்டும். இது கடந்த ஆண்டில் நடந்தவற்றின் நீட்சியாகவும், புதிய முனைப்பாகவும் இருக்கலாம்.

## சமகாலத்தில் புதிய முயற்சிகள்

தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்துகொண்டே செல்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகின் ஒரு பகுதியில், ஆசிரியர் ஒருவர் அல்லது ஏதேனும் ஒரு பள்ளி எடுக்கும் முன்முயற்சிகள், பரிசோதனைகள், ஆய்வுகள் மற்ற பகுதியினருக்குத் தெரிய வாய்ப்புகள் குறைவு. வேலூரில் ஒரு கிரமப்புறப் பள்ளியில் ஓர் ஆசிரியர் ஒரு புதிய முயற்சி மேற்கொண்டார் எனில் அது கன்னியாகுமரியில் வசிக்கும் இன்னொரு ஆசிரியருக்கு அச்சு, காட்சி ஊடகங்களின்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

வழியேதான் தெரியவரும். அதையும் அவர் சாதித்திருப்பார் என உறுதியாகக் கூறமுடியாது. இன்று ஏராளமான செய்திகள் நம் கைக்குள்ளேயே மொபைலில் வந்துவிடுகின்றன. இதை ஆசிரியர்கள் நடப்போடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். உலகம் முழுக்கவே வேகமாகக் கல்வி பற்றிய சிந்தனைகள் மாறிவருகின்றன. நம் சிக்கல்களும் கோவிட் ஒரு பெரும் சிக்கலைச் சிதைவாகக் கொடுத்துச் சென்றுள்ளது. அதற்கான தீர்வுகளை நோக்கி வேக வேகமாக நகர்வுகள் நடக்கின்றன. அந்த முயற்சிகளைப் பற்றி எல்லாம் வாசிப்பதும் பகிர்வதும் விவாதிப்பதும் மிகவும் அவசியம்.

## உடலும் வலு

ஆசிரியர் சமூகம் உடல்நலனில் கூடுதல் அக்கறை செலுத்துவது அவசியம். இந்தக் கோடை விடுமுறையின் தொடக்கமாக தினமும் நீண்ட நடைப் பயணம், சின்ன ஓட்டம், உடற்பயிற்சி, சத்தான சமையல் எனச் சின்னச் சின்ன முயற்சிகளைத் தொடங்கலாம். அது வருடம் முழுக்க எப்படி நீட்டிப்பது என்பதையும் யோசனை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு இல்லையென்றாலும் நமக்காக, நம் குடும்பத்திற்காகவும் இதனைச் செய்தாக வேண்டும்.

## வளப்படுத்தும் வாசிப்பு

நூல்கள் வாசிப்பு கற்பித்தல் செயல்பாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். கல்விப்பணியை வலுப்படுத்த நூல்களைத் தேர்வு செய்து வாசிப்பது அவசியம். சிறார் இலக்கிய நூல்களை வாசிக்க வேண்டும். அவற்றில் சிறந்தவற்றை மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யலாம். ஆசிரியர் ஒரு நூலினைப் பற்றி வகுப்பில் சொல்லிவிட்டால் அது மாணவர்களிடையே பெரும் கவனத்தை ஈர்க்கும். சிறார் இலக்கியம் மற்றும் கல்வி சார்ந்த நூல்களை மட்டுமல்ல விருப்பமான எந்தத் துறை, எந்த வகை இலக்கிய நூல்களையும் வாசிக்கலாம். அது மனதிற்கான புத்துணர்ச்சியைத் தரும்.

கற்றல் என்பது முடிவுறா பயணம். பார்வைகள் மாறிக்கொண்டே இருக்கும். அது விசாலமாக அகல விரிந்துகொண்டே போகட்டும். இந்தக் கோடைக் கால ஓய்வு நிறைய ஆகாசத்தையும் நிறையச் சிந்திக்கவும் வழிவகை செய்யட்டும்.

**பேராசிரியர் ச. மாடசாமி - கல்வியாளர்**




"விடுமுறை என்பது சிறு ஓய்வு. ஓய்வின் இரு கண்கள்- வாசிப்பும் சந்திப்பும்... சில புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாசியுங்கள். பள்ளி குழந்தைகளை விட்டு விலகாமல் அவர்களை வீடுகளிலும் வீதியிலும் தேடிச் சந்தியுங்கள். வாசிப்பும் சந்திப்பும் உங்கள் வகுப்பறையை வளமைச் செய்யும்"

பேராசிரியர்

## வே. வசந்திதேவி

- கல்வியாளர்



ஆசிரியர்களே,
உங்கள் வீட்டுக்கு
அருகில் வசிக்கும்
அரசுப்
பள்ளிகளைச் சேர்ந்த
மாணவர்களுடன்
உரையாடலை
மேற்கொண்டு
நல்ல உறவை
வளர்த்துக்
கொள்ளலாம்.
புதிய கற்பித்தல் முறைகளை,
மாணவர் மகிழ்ச்சியாகக்
கற்கும் முறைகளைப்
பரிசார்த்தமாகவாவது
முயற்சித்துப் பார்க்கலாம்.
பின்பு தங்கள்
வகுப்பறைகளுக்கும் கொண்டு
செல்ல முயலலாம்.

12 வயதிற்கு மேலான
வளரிளம் பருவத்தினர்
(Adolescents) மீது தனி
அக்கறை
காட்ட வேண்டும்.
இவர்களே 'போக்கிரிகள்',
'உதவாக்கரைகள்',
'வன்முறையாளர்கள்'
என்று பலராலும் கரித்துக்
கொட்டப்படுபவர்கள்.
உண்மையில் இவர்கள்
அன்புக்கும், பரிதலுக்கும்
ஆதரவிற்கும் ஏங்குபவர்கள்.



இந்தப் பருவத்தினர்,
தங்கள் பள்ளியோ,
அருகாமையில் வசிப்பவரோ,
உங்களை அணுகிப் பேச
வாய்ப்பளியுங்கள். உங்கள்
தொலைபேசி எண்ணைக்
கொடுங்கள். தங்கள்
பிரச்சனைகளை,
தவிப்புகளைக் கொட்டித்
தீர்த்து விடுவார்கள்.
அவற்றிற்கான தீர்வு நோக்கி
உரையாடுங்கள்.
நம்பிக்கையூட்டுங்கள்.

- விழியன்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com





# மாணவிகளின் மகிழ்ச்சியே எனக்கு முக்கியம்!

கல்வியறிவில் குறிப்பிட்ட இடத்தைத் தக்கவைத்திருப்பதில், தமிழ்நாடு அரசுப் பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களின் கல்வியறிவுக்கான புகலிடமாக அரசுப் பள்ளிகள்தான் இருக்கின்றன. மாணவர்களைத் தொடர்ந்து பள்ளிக்கு வரவழைக்க பல ஆசிரியர்கள் பல்வேறு விதமாகப் பாடுபட்டு வருகின்றனர். அப்படிப்பட்ட ஓர் ஆசிரியர் குறித்துத்தான் இப்போது நாம் காணப் போகிறோம்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஐங்குணம் கிராமத்தில் ஒரு அரசினர் மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளியின் ஆசிரியர் ஆனி ரீட்டா. இவர் தன் சொந்த செலவில் கழிவறையைக் கட்டிக் கொடுத்துள்ளார்.

ஆனி ரீட்டாவின் இந்தச் செயலுக்குப் பாராட்டுகள் குவிந்து வரும் வேளையில், கனவு ஆசிரியர் இதழுக்காக அவரைத் தொடர்புகொண்டு பேசினோம். தனது கனவை நனவாக்கியது குறித்து அவரே கூறுகிறார்.

"2006-ஆம் ஆண்டு நான் ஐங்குணம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்டேன். அன்றிலிருந்து இன்றுவரை இப்பள்ளியுடனான என் உறவு தொடர்கிறது. எங்கள் பள்ளியில் 276 மாணவிகள், 180 மாணவர்கள் என மொத்தம் 456 பேர் பயின்று வருகின்றனர். இங்கு அரசு ஏற்படுத்தித் தந்திருந்த கழிவறையைப் பராமரிப்பதில் சிக்கல் இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் விடுமுறை முடிந்து பள்ளிக்கு வந்தால், சமூக விரோதிகள் கழிவுநீர்க் குழாய்களை உடைத்து வைத்திருப்பார்கள். அல்லது திருடிக்கொண்டு சென்றிருப்பார்கள்.

குழாயைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். கழிவறைக் கதவுகள் உடைக்கப்பட்டிருக்கும். இப்படிப் பல்வேறு இன்னல்களால் கழிவறையைப் பயன்படுத்தவே யோசிக்கும் நிலைக்கு மாணவிகள் தள்ளப்பட்டனர். மாதவிடாய் காலங்களில் அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அப்போதுதான் 'நம் பள்ளிக்கு நாமே கழிவறை வசதி ஏற்படுத்தித் தந்தால் என்ன?' என்ற சிந்தனை எழுந்தது. பள்ளிக்குக் கழிவறை கட்டித் தரும் எண்ணமும் தோன்றியது.

அதை என் மகள்கள் இருவரிடமும் தெரிவித்தேன். அவர்கள் மகிழ்ச்சியாகச் சம்மதம் தெரிவித்தனர். தலைமை ஆசிரியருக்கும் தெரிவித்தேன். என் சேமிப்புப் பணத்திலிருந்து மூன்று லட்ச ரூபாயில் முதல்கட்டப் பணியைத் தொடங்கினேன். கட்டடம் கட்டுவதற்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை வாங்கினேன். ஆனால், கட்டுமானப் பணிகளை உடனே தொடங்க அந்த நேரத்தில் என்னிடம் பணமில்லை. முன்னாள் மாணவன் ஒருவனிடம் என் நிலையை எடுத்துக் கூறினேன். அவனும் அவனுக்குத் தெரிந்தவர்களிடமும் கடன் வாங்கிக் கொடுத்தான்.



மகள்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் ஆனி ரீட்டா

தர்மதுரை என்ற மாணவர் குறித்து இங்கே முக்கியமாகப் பகிர விரும்புகிறேன். கழிவறையைக் கட்டித் தர வேண்டும் என்ற என் லட்சியம் நிறைவேற அவரது பங்களிப்பு முக்கியமானது. M.Sc. Maths. முடித்துள்ள தர்மதுரை, எங்கள் பள்ளியில் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். கொரோனா காலத்தில் அவரால் ஆசிரியர் பணியைத் தொடர முடியாமல் போனது. சென்ட்ரிங் வேலைகள் செய்து வந்தார்.

அவரைத் தொடர்புகொண்டு நான் கழிவறை கட்டுவதற்கு உதவ முடியுமா எனக் கேட்டேன். உடனே சம்மதம் தெரிவித்ததோடு, தன் அம்மாவையும் அழைத்துவந்து கழிவறை கட்டும் பணியில் ஈடுபட்டார். கட்டுமானப் பணி குறித்து அவருக்கு அனுபவம் இருந்ததால், கழிவறை கட்டும் பணி விரைவாக நடந்தது.

எனினும் அவ்வப்போது பணப் பற்றாக்குறை ஏற்பட்டது. எனது முன்னாள் மாணவர் முருகேசன் தன் பங்குக்கு ஒரு சிறிய தொகையைக் கொடுத்தார். வாங்க மறுத்தும் அவர் கேட்கவில்லை. அதை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அவரது உதவும் மனம் பாராட்டத்தக்கது. பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் இறுதியாக 10 கழிவறைகளைக் கட்டி முடித்தோம். அவற்றில் மாணவ, மாணவிகளுக்கு 8 கழிவறையும், ஆசிரியர்களுக்கு இரண்டு கழிவறையும் கட்டிக்கொடுத்தோம். எளிதில் உடைக்கமுடியாத அளவுக்கு இரும்புக் கதவுகள் அமைத்து, ஆயில் பெயிண்டிங் செய்துள்ளோம்.


கழிவறைக்குத் தேவையான வாளி, நீர் அள்ளும் குவளை முதலிய பொருட்களையும் எனது செலவிலேயே வாங்கிக் கொடுத்துள்ளேன். இப்பகுதியில் கழிவுநீர் அகற்றும் வசதி இல்லாததால், ஆழமான செப்டிக் டேங்க் வசதியுடன் கழிவறைகளைக் கட்டி உள்ளோம்.

கழிவறையை அமைக்க மொத்தமாக ரூபாய் 6.40 லட்சம் செலவானது. அப்பணத்தைப் புரட்டுவதற்குச் சிரமங்கள் பட்டாலும், பள்ளிக்கு வரும் மாணவிகளின் மகிழ்ச்சிதான் எனக்கு முக்கியம். அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்த்து என் மனம் நெகிழ்கிறது. கழிவறை உருவாக்கத்துக்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அரசுப் பள்ளிகளை நம்பி தமிழ்நாட்டில் அதிகமான மாணவர்கள் இருக்கின்றனர். தமிழ்நாட்டில் ஒருநாள் எல்லாப் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்றார்.

ஆனி ரீட்டா போல் தம் பள்ளியை நேசிக்கும் ஆசிரியர்களால்தான், பல மாணாக்கர்கள் மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் பள்ளிக்கு வருகின்றனர்.

- அருண்






Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# கடல்-குறித்த 10 அறிவியல் உண்மைகள்



கடலைக் கண்டு வியக்காத மனிதர்களே இருக்கமுடியாது. பண்டைய காலம்தொட்டு தமிழ் இலக்கியங்களிலும் கடல் பற்றிய பாடல்களும் குறிப்புகளும் ஏராளம் உள்ளன. மனித வாழ்வில் மகத்தான பங்காற்றிவரும் கடல் குறித்து 10 சுவாரஸ்யமான அறிவியல் உண்மைகளை இங்கே பார்க்கலாம்.


நாராயணி சுப்பிரமணியன்




- நாம் சுவாசிக்கும் ஆக்சிஜனில் **50%** கடலில் இருந்துதான் வருகிறது. அதாவது, நாம் இரண்டு முறை மூச்சுவிட்டால், அதில் ஒரு சுவாசத்துக்கான ஆக்சிஜன் கடலில் இருந்து கிடைக்கிறது. கடலில் இருந்து நாம் எவ்வளவு தொலைவில் இருந்தாலும், கடல் மூலமாகத்தான் சுவாசிக்கிறோம்.



- கடலில் சில இடங்களில் மிகப்பெரிய பாசிக்காடுகளும் கடல் புல் படுகைகளும் உள்ளன. ஆனால் பெரும்பாலான கடற்பகுதிகளில், உணவுச்சங்கிலியின் தொடக்கத்தில் தாவரங்களாக இருந்து செயல்படுபவை நுண்பாசிகள்தாம். இவற்றை Phytoplankton என்று அழைப்பார்கள். இவற்றை வெறும் கண்ணால் பார்க்க முடியாது, நுண்ணோக்கி வழியாக மட்டுமே பார்க்க முடியும். இந்த நுண்பாசிகள்தான் கடலின் தாவரங்களாக இருந்து கடலின் சூழலுக்கு உணவு தருகின்றன.



- நிலவு மற்றும் செவ்வாய்கிரகத்தின் பரப்பளவை நாம் அறிந்த அளவைவிட, நம்முடைய பூமியிலேயே இருக்கும் கடலின் பரப்பளவைப் பற்றி நாம் அறிந்துவைத்திருப்பது குறைவுதான். இதுவரை பத்து விழுக்காட்டுக்கும் குறைவான கடல் பரப்பை மட்டுமே நாம் முழுவதுமாக ஆராய்ந்திருக்கிறோம். கடல்சார் ஆராய்ச்சி ஏன் அவசியமானது என்று இது நமக்குக் காட்டுகிறது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், பூமியில் உயிர் என்பது தோன்றியதே கடலில்தான் என்று ஒரு கருதுகோள் உண்டு. அன்றைய காலகட்டத்தில், பூமியின் பரப்பளவை விட ஆழ்கடலில்தான் வெப்பநிலை ஓர் சீராக இருந்தது என்பதால் உயிர் அங்கே தோன்றியிருக்கவே வாய்ப்பு அதிகம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

காடுகளை நாம் எவ்வாறு அணுகுகிறோமோ, கடற்கரைகளையும் அவ்வாறே அணுகவேண்டும். அப்போதுதான் அவை முழுமையான வாழிடங்களாகும். நிலத்திற்கும் கடலுக்குமான இடைப்பட்ட பகுதிகளாக மட்டும் அவற்றைக் கருதக் முடியாது. கண்ணுக்குத் தெரியும் நண்டுகள், சிப்பி, கிளிஞ்சல்களைக் காட்டிலும் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையிலான உயிரினங்கள் கடற்கரையின் மணல் வெளிகளில் வசிக்கின்றன. இரண்டு மணல் துகள்களுக்கு இடைப்பட்ட இடைவெளியில்கூட சிறு உயிரிகள் வசிக்கின்றன. கடற்கரை என்பது உயிர் நிரம்பிய ஒரு முக்கியமான வாழிடம்.

'கடலில் வீணாகச் சென்று கலக்கிறது ஆற்று நீர்' என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால் அது மனிதனை மையப்படுத்திய குறுகலான பார்வை. இயற்கையில் எதுவுமே வீணாவதில்லை. ஆறுகள் மற்றும் சிறிய நன்னீர் வாய்க்கால்கள் மூலம் கடலுக்குள் சத்துக்கள் போய்ச் சேர்கின்றன. இவையே கடலோர வாழிடங்களில் உள்ள உயிர்களுக்கு உணவு ஆதாரங்களாக அமைகின்றன. இந்த இயற்கைச் சுழற்சி சீர்குலைந்தால் கடல் சூழல் பாதிக்கப்படும்.

உலக அளவில், கடலில் இருந்து கிடைக்கும் மீன், கணவாய், சிப்பி, கிளிஞ்சல், நத்தை உள்ளிட்ட கடல் உணவுகள் மக்களுக்கு முக்கியமான கடலோர உணவு ஆதாரங்களாக இருக்கின்றன. உலகில் மூன்று பில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள், கடல் உணவுகளை, குறிப்பாக மீன்களையே புரதச்சத்தின் ஆதாரமாக நம்பியிருக்கிறார்கள். இவர்களுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டுமானால் மீன்வளம் பாதுகாக்கப்படவேண்டும்.

பசிபிக் பெருங்கடலில், 'Great Pacific Garbage Patch' என்ற ஒரு குப்பைமேடு உள்ளது. 16 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட



பிரம்மாண்டமான ஒரு குப்பைமேடு இது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும் இந்தக் குப்பைமேட்டின் அளவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. வேறு சில பெருங்கடல்களிலும் குப்பைமேடுகள் உண்டு என்றாலும் பசிபிக் பெருங்குப்பைமேட்டின் அளவு மிகவும் பெரியது. இதில் பெரும்பாலும் நெகிழிக் குப்பைகளே காணப்படுகின்றன. கடலுக்குள் சென்று சேரும் குப்பைகளின் தீவிரத்தை, திடக்கழிவுகளின் அவலத்தை இது உணர்த்துகிறது.

கடலைப் பொறுத்தவரை, பவளத்திட்டுகள் (Coral reefs) என்பவை முக்கியமான வாழிடங்களாகக் கருதப்படுகின்றன. பல்வேறு உயிர்களுக்கான வாழிடங்களாகவும் சிறு மீன்களுக்கான நர்சரிகளாகவும் இவை கருதப்படுகின்றன. இந்தப் பவளத்திட்டுகள், பவள உயிரி (Corals) என்று அழைக்கப்படும் ஒரு வகை விலங்குகளால் உருவாக்கப்படுகின்றன. பவள உயிரிகளின் வலுவான கால்சியம் கார்பனேட் ஓடுகள் ஒருங்கிணையும்போது பவளத்திட்டுகள் உருவாகின்றன.

கார்பன் டை ஆக்சைடு எனப்படும் கரியமில வாயுவை உறிஞ்சி நமது வெப்பநிலையைச் சீராக வைப்பதில் கடல் முக்கியப் பங்கு வகிக்கின்றது. பிற அமைப்புகளோடு ஒப்பிடும்போது, கடல் 50 மடங்கு கூடுதலான கரியமில வாயுவை உறிஞ்சிக்கொள்கின்றது. இதனால் பசுமைக்குடில் விளைவின் தாக்கம் குறைகிறது.

– நாராயணி சுப்ரமணியன்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

நலம் ஆலோசனை



# கோடை காலத்தில் பரவும் நோய்களும் பாதுகாப்பு முறைகளும்

**சென்னை, அரசு ராஜிவ்காந்தி பொது மருத்துவமனை, அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவ அலுவலரும், குழந்தை நல மருத்துவருமான எம்.எஸ். சவிதாமுல்லை கோடையைச் சமாளிக்கச் சில ஆலோசனைகளை வழங்குகிறார்.**

கோடை காலத்தில் அம்மை நோய் பாதிப்பு, தொண்டை வறட்சி, வயிற்றுப்போக்கு, கிருமிகள் பரவி வைரஸ் நோய்கள் பரவும் வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக குழந்தைகள் மேற்கண்ட நோய்களில் பாதிக்கும் வாய்ப்புகள் அதிகம். அதனால் குழந்தைகள் கையை அடிக்கடி கழுவிவிடவேண்டும். வளர்ந்த நகங்களை வெட்டி விடவேண்டும். குழந்தைகள் சரியாக மலம் கழிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும்.

தற்போது வருவது சாதாரண வைரஸ் காய்ச்சல் போல் தெரிகிறது. எல்லா பரிசோதனையும் செய்தாலும் நார்மலாக இருக்கிறது. ஆனால் காய்ச்சல் நான்கைந்து நாட்களாகத் தொடர்ந்து இருக்கிறது. சிலருக்கு இரத்தப் பரிசோதனை செய்தால் டெங்கு காய்ச்சல் தெரியும்.



ஆனால் கொஞ்சமாகத் தெரிகிறது. இதுதான் சீஸன் வைரஸ் காய்ச்சல். (இது கோவிட் வைரஸ் கிடையாது)

சிலருக்கு இரத்த அணுக்கள் குறைந்து காணப்படுகிறது. அதாவது டெங்கு காய்ச்சல் இல்லை. ஆனால் பிளேட்லெட்டில் இரத்த அணுக்கள் குறைந்து காணப்படுகிறது. எல்லா காய்ச்சல் வரும்போதும் பிளேட்லெட்டில் இரத்தம் கொஞ்சம் குறையும். ரொம்ப குறையாது. ஆனால் தற்போது அதிகம் குறைகிறது. ஒரு மனிதனுக்கு குறைந்தபட்சம் ஒன்றரை லட்சத்திலிருந்து 3 லட்சம் வரை இரத்த அணுக்கள் உடலில் இருக்கவேண்டும். ஆனால் இந்த வைரஸ் காய்ச்சல் கண்ட சிலருக்கு ஒரு லட்சம், சிலருக்கு 90 ஆயிரம் வரைக்கும் இரத்த அணுக்கள் குறைந்திருந்ததைப் பார்க்க முடிந்தது. இதனால் பயப்படத் தேவையில்லை. நான்கு நாட்களுக்குமேல் காய்ச்சல் குறையாமல் இருந்தால்தான் இரத்தப் பரிசோதனை செய்யவேண்டும். குறிப்பாக, காய்ச்சல் நேரத்தில் எந்த உணவும் சாப்பிடப் பிடிக்காது. அதனால் அரிசியில் செய்யப்பட்ட நீராகாரம் தேவையான அளவு சாப்பிடவேண்டும். காய்ச்சல் குறைகிற வரைக்கும் முகக்கவசம் பயன்படுத்துவது நல்லது.

இந்த வைரஸ் நோய் வெயில் காலத்தில் குழந்தைகளையும் அதிகமாக பாதிப்பதனால் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

## அம்மை நோயைக் கட்டுப்படுத்த...

அம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் முதலில் மருத்துவமனைக்குப் போய் என்ன மாதிரியான அம்மை வந்திருக்கிறது என்று பரிசோதிக்கவேண்டும். ஐந்து



www.Padasalai.Net www.TrbTnpsc.com

### கோடை கால உணவு முறை

- அன்றன்றைக்குச் சமைத்த உணவுகளை உட்கொள்வது நல்லது. அதுவும் அந்தந்த வேளைக்குச் சமைத்த உணவுகளை உட்கொள்வது நல்லது. குளிர் சாதனப்பெட்டியில் வைத்த உணவுப் பொருட்களில் அதனுடைய நல்ல சத்துக்களின் தன்மைகள் 24 மணி நேரத்தில் குறைந்துவிடும்.
- பழங்கள் மற்றும் காய்கறிகளை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்த பிறகே சமைக்கவேண்டும்.
- குளிர்சாதனப் பெட்டியில் நீரை வைத்து எடுத்து உடனே பருகுவதோ, உட்கொள்வதோ கூடாது. அதன் குளிர் தன்மை குறைந்த பிறகுதான் குடிக்கவேண்டும். அப்படிக் குடித்தால் தொண்டைக்குள் இருக்கிற பாதுகாப்பு லேயர் பாதிக்கப்பட்டு அலர்ஜியை ஏற்படுத்தும். (இது சுடுநீருக்கும் பொருந்தும்)
- கோடை காலத்தில் கிடைக்கக்கூடிய இயற்கையான பருவகாலப் பழ வகைகள், நுங்கு, வெள்ளரி, இளநீர், அரிசியில் வடித்த கஞ்சியைப் பருகலாம்.



வயதுக்கு கீழுள்ள குழந்தைகளுக்குக் காய்ச்சல் இருக்கும். சிறிய அளவில் அம்மை இருக்கும். மேலுக்குப் பூச மருந்தும் காய்ச்சலுக்கு மாத்திரையும் போதும். அதற்குப் பயம் தேவையில்லை. குழந்தைகளுக்குப் போட வேண்டிய தடுப்பூசிகள் போடப்பட்டுவிட்டதா என்பதைப் பெற்றோர் கவனிக்கவேண்டும். பெரியவர்கள் நிமோனியா தடுப்பூசி போட்டுக்கொள்வது நல்லது.

### தோல் நோய்கள்

தோல் நோய்கள், வெயில் கட்டிகள் வரக் காரணம் நம் உடலிலிருந்து கெட்ட நீர்கள் வெளியேறும்போது அதில் கிருமிகள் தொற்றிக்கொண்டு சுத்தமான தண்ணீரை, இரத்தத்தை அசுத்தமாக்கிவிடுகின்றன. கிருமிகள் தோல் மேல் உட்காரும்போதுதான் அது கட்டியாகிறது. நம் சருமத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். காற்றோட்டமான இடத்தில் இருக்கவேண்டும். வெளியேறும் வியர்வையைச் சுத்தமான துணியால் அடிக்கடி துடைக்க வேண்டும். காலை அல்லது மாலை வேளைகளில் வெளிக்காற்று உடலில் நன்கு படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும். முடிந்த அளவுக்கு வயதுக்கு ஏற்ற அளவில் உடற்பயிற்சி செய்யவேண்டும். அதனால் ரத்த ஓட்டம் அதிகமாகிறது. தேவையில்லாத கெட்ட நீர் எல்லாம் வெளியாகிவிடும். பசியும் தூண்டும். உடல் கழிவுகள் சரியாக வெளியேறும். கிருமித் தொற்றும் நம்மை பாதிக்காது.

### வயதானவர்களின் பாதுகாப்பு

முக்கியமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உச்சி வெயிலில் ரொம்பவும் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அதிக வெயிலில் செல்லும்போது சிலருக்கு மயக்கம் வரும் அறிகுறி தெரிந்தால் உடனே நிழலான இடத்தில் இருக்கவேண்டும். தேவைப்பட்டால் இரண்டு சக்கர வாகனத்தில் பயணிக்காமல் வெயில் படாத வாகனத்தில் பயணிக்கவேண்டும். எப்போதும் தண்ணீர் பாட்டிலை உடன் வைத்திருக்கவேண்டும். பழச்சாறோ, இளநீரோ பருகுவது நல்லது. இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்கள் அதற்கான மருந்துகளை கைவசம் வைத்துக்கொண்டு வெயிலில் செல்வது அவசியம்.

### கர்ப்பிணிப் பெண்களின் பாதுகாப்பு

பொதுவாகவே கர்ப்பிணிப் பெண்கள் பேறு காலத்தில் பயணிப்பது கூடாது. அதிலும் வெயில் காலத்தில் உச்சி வெயில் வேளையில் பயணிப்பதையே தவிர்க்கவேண்டும். தேவைப்படின் வெயில் தணிந்த வேளைகளில் பயணிக்கலாம். தண்ணீர் பாட்டில் கரும்புச்சாறு, பழச்சாறு, நீர் சத்துள்ள பானங்களை உடன் வைத்திருந்து பருகுவது நல்லது. தாய்ப்பாலுக்கும் சுத்தமான இரத்தத்துக்கும் சமமானது என்றால் இளநீரைத்தான் சொல்வார்கள். அதனால் இளநீர் வெயிலுக்கு கைகண்ட மருந்து.

### வெயிலுக்கான உடைகள்

வெயில் காலத்தில் பருத்தி ஆடைகளை அணிவதுதான் சருமத்திற்கு நல்லது. அதிலும் உள்ளாடைகள் - வெளி ஆடைகள் எதுவாக இருந்தாலும் இறுக்கமான உடைகளைத் தவிர்த்துவிட்டு தளர்வான உடைகளை அணிவது நல்லது. அதிலும் குழந்தைகளுக்குப் பருத்தியாலான தளர்வான உடைகள் ரொம்ப நல்லது. இவற்றையெல்லாம் செய்தால் கோடையைப் பாதுகாப்பாகக் கொண்டாடலாம்.





Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மன அழுத்தத்தில் இருந்து விடைபெற வேண்டுமா ?

கொரோனா காலத்தில் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது என ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது. இந்தியாவில் மட்டும் 70 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மன அழுத்தத்தில் இருந்து விடுபட சில எளிய வழிகளை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது.



### அடிப்படைப் பயிற்சி

உணர்ச்சிவயப்பட்ட நேரங்களில் உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் கவனிக்க வேண்டும். மெல்ல தரையில் பாதம் பதித்து உங்கள் உடலோடு மனதைத் தொடர்புபடுத்துங்கள். பின்னர் ஆசுவாசப்படுத்திக் கொண்டு புற உலகின் மீது கவனம் செலுத்துங்கள். நீங்கள் பார்த்தது, கேட்டது, சுவைத்தது என அனைத்தின் மீதும் கவனம் செலுத்தி, உங்கள் முன் இருக்கும் உலகை உற்று நோக்குங்கள். எங்கே இருக்கிறோம், யாருடன் இருக்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதில் கவனம் செலுத்துங்கள். பின் தெளிவான முடிவு கிடைக்கும்.

சமைப்பது, சாப்பிடுவது, துவைப்பது போல் இந்தப் பயிற்சியை நீங்கள் தினசரி வழக்கமாகக் கொள்ளலாம். இதன் மூலம் உங்களுக்குச் சோர்வு தரக்கூடிய செயல்கள் கூட சுவாரஸ்யம் நிறைந்ததாக மாறும்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



### பிடியில் இருந்து நீங்குதல்

இதில் மூன்று படிகள் உள்ளன.

1. உங்களைப் பிடித்திருக்கும் கவலையான எண்ணங்கள், சிந்தனைகளை கவனியுங்கள்.
2. அதை உங்கள் மனதுக்குள் அமைதியாகச் சொல்லிப் பாருங்கள். உதாரணத்துக்கு, எனக்குக் கோபம் வருகிறது. பழைய நினைவுகள் என்னை வதைக்கின்றன. எதிர்காலம் குறித்த பயம் எனக்கு அதிகமாக இருக்கிறது. இந்த மாதிரி உங்கள் கவலைகளை மனதுக்குள் அமைதியாகச் சொல்லிப் பாருங்கள்.




### உங்கள் மதிப்புகளை ஆய்வு செய்யுங்கள்

உதவுவது, தைரியமாக இருப்பது, கடினமாக உழைப்பது போன்றவற்றில் நீங்கள் மிகவும் மதிப்பானதாகக் கருதுவதைத் தேர்வு செய்யுங்கள். பின் அதைச் செயல்படுத்தத் தொடங்குங்கள். அந்தச் செயல்பாட்டில் கவனம் அவசியம்.



### எந்த ஒரு கடினமான சூழ்நிலையையும் மூன்று விதத்தில் அணுகலாம்

1. கடந்து செல்வது
2. மாற்ற முடிந்ததை மட்டும் மாற்றி, கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு உங்கள் மதிப்புகளோடு வாழ்வது
3. தோல்வியை ஏற்றுக்கொண்டு, உங்கள் மதிப்புகளை விட்டுச் செல்வது.



### அன்பாக இருங்கள்

உங்கள் துன்பத்தைக் கவனிப்பது போலவே, பிறர் துன்பத்தையும் கவனியுங்கள். அன்போடு நடந்துகொள்ளுங்கள். இரக்கமற்ற சிந்தனையைக் கைவிடுங்கள். உங்களிடம் நீங்களே அன்பாகப் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். இது பிறருக்கு உதவுவதற்கான சக்தியையும், அன்பு செலுத்துவதற்கான உத்வேகத்தையும் அளிக்கும். இதனால் பலரும் பயனடைவர். அரவணைக்கும் கைகளுக்காக பல தோள்கள் காத்துக் கிடக்கின்றன.



### வானிலை போல் கடின எண்ணங்கள் வந்து செல்லட்டும்

கடின எண்ணங்கள், உணர்வுகளில் இருந்து வெளிப்பட முடியாதபோது, அதற்கென ஒரு நேரத்தை ஒதுக்கிடுங்கள்.

- சிந்தனை மொத்தத்தையும் உங்கள் கடினமான எண்ணங்கள், உணர்வுகளின் பக்கம் செலுத்துங்கள். அதை அங்குலம் அங்குலமாகப் புரிந்துகொள்ளுங்கள். உங்கள் துயரத்தை ஒரு பொருள் போல் கருதிக்கொண்டு அதன் அளவு, உருவம், நிறம் என அனைத்தையும் ஆராயுங்கள்.
- கடினமான உணர்வுகளை மனதுக்குள் சொல்லிப் பார்த்துக்கொண்டே இருங்கள்.
- வானிலைபோல் கடின எண்ணங்களையும் வந்து செல்ல அனுமதியுங்கள். கடின எண்ணங்களோடு சண்டையிட்டு வருந்துவதைவிட அது உங்களுக்குள் செல்ல அனுமதியுங்கள். வானிலையோடு சண்டையிடுவது வீண், உங்களுக்கு நேர விரயம்தான் ஆகும். அதுபோல்தான் கடின எண்ணங்களும். அதை விடுத்து உங்கள் முக்கிய பணிகளில் கவனம் செலுத்துங்கள்.


Source: WHO guide



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com





# (hichki)

## பலவீனத்தை பலமாக மாற்றுங்கள்!

தூரெட் நோய்க்குறியீட்டால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர், ஆசிரியர் பணியைத் தேர்வு செய்து தனது பலவீனத்தை உடைத்துக் காட்டுவதே ஹிச்கி (Hichki) திரைப்படத்தின் கதை.

தூரெட் நோய்க்குறியீடு ஒரு மரபுவழி நரம்பியல் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையுள்ளவர்கள்,



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பேச்சுக்கு இடையே சத்தம் எழுப்பிக்கொண்டே இருப்பார்கள். விக்கல் போல் சத்தம் எழுப்புவதால் இந்தப் படத்துக்கு விக்கல் (Hichki) என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்.

2018ஆம் ஆண்டு ராணி முகர்ஜி நடிப்பில் வெளியான இப்படம், இதே பிரச்சினையைச் சந்தித்த பிராட் கோஹெனின் சுயசரிதையான 'Front of the Class' எனும் நூலைத் தழுவி எடுக்கப்பட்டது.

நைனா மாதுர் எனும் ஆசிரியர் கதாபாத்திரத்தில் ராணி முகர்ஜி அசத்தலான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். டூரெட் நோய்க்குறியீட்டால் புறக்கணிக்கப்படும் நைனா, தொடர்ந்து ஆசிரியர் பணிக்கு விண்ணப்பித்த வண்ணம் இருக்கிறார்.

ஒரு நேர்காணலில், தனக்குரிய பிரச்சினை குறித்து பள்ளி நிர்வாகிகளிடம் விவரிக்கிறார். 'இந்தப் பிரச்சினையை வைத்துக்கொண்டு நீங்கள் ஆசிரியர் பணியைப் பெறுவது சிரமம். மாணவர்களுக்கு எப்படிப் பாடம் நடத்திப் புரிய வைப்பீர்கள்' என நிர்வாகிகள் கேட்கின்றனர்.

'எனது டூரெட் நோய்க்குறியீடு குறித்து இதற்கு முன்பு நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என நைனா கேட்கிறார். 'இல்லை' என நிர்வாகிகள் கூற, 'தற்போது இதுபற்றி உங்களுக்குத் தெரியும்தானே' என்கிறார். 'ஆமாம்' என நிர்வாகிகள் கூற, 'பள்ளி நிர்வாகிகள் உங்களுக்கே புதிதாக ஒன்றைக் கற்பிக்க முடிகிறது என்றால், மாணவர்களுக்கு என்னால் நிச்சயமாகக் கற்பிக்க முடியும்' என கூறிவிட்டு அங்கிருந்து நகர்கிறார்.

தொடர் முயற்சியால் நைனாவுக்குத் தான் பயின்ற புனித நோட்கர் பள்ளியிலேயே ஆசிரியர் பணி கிடைக்கிறது. பணம் படைத்தவர்களின் குழந்தைகள் படிக்கும் அப்பள்ளியில், கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் குடிசைப் பகுதியில் வசிக்கும் அடித்தட்டு மக்களின் குழந்தைகள் பயில்கின்றனர். 9F வகுப்பில் உள்ள அந்தக் குழந்தைகளுக்குக் கற்பிக்கத்தான் நைனா தேர்வு செய்யப்படுகிறார்.

ஆரம்பத்தில் நைனாவின் பிரச்சினையைக் கேலி செய்யும் குழந்தைகள், பின்னர் அவரைப் புரிந்துகொண்டு கற்றுக்கொள்ள ஆர்வமாக இருக்கின்றனர்.

நன்றாகப் படிக்கும் மாணவர்கள் 9A வகுப்பில் இருக்கின்றனர். இவர்களுக்கும் 9F மாணவர்களுக்கும் இடையே பகைமை உணர்வு மேலோங்கி இருக்கிறது.

இதனிடையே அக்குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்க நைனா மிகவும் சிரமப்படுகிறார்.



அறிவியல், கணிதம் போன்றவற்றை அக்குழந்தைகளின் வாழ்க்கையில் இருந்தே கற்பிக்கத் தொடங்குகிறார்.

அவித்த முட்டையைத் தூக்கிப் போட்டுப் பிடிக்கச் செய்து பரவளையம் (Parabola) குறித்து விவரிக்கிறார். கூடைப்பந்தின் எடையை வைத்து விசை குறித்த புரிதலை ஏற்படுத்துகிறார்.

சீட்டாடும் மாணவன் ஒருவனுக்குள் இருக்கும் கணிதத் திறனை அவனே வியக்கும் வகையில் புரிய வைக்கிறார். மாணவர்களின் அன்புக்குப் பாத்திரமான ஆசிரியராகிறார் நைனா.

தேசிய அளவில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியில் 9A மாணவர்கள் கலந்துகொண்டு இரண்டு ஆண்டுகள் பரிசு பெற்றிருப்பார்கள். 9A வகுப்பாசிரியரால் அவமானப்படுத்தப்பட்ட 9F மாணவன் ஒருவன், அறிவியல் கண்காட்சிக்குச் செய்து வைத்திருந்த பொருட்களை நாசம் செய்துவிடுகிறான்.

இதனைத் தொடர்ந்து வரும் பிரச்சினைகளைச் சமாளித்து, 9F மாணவர்களைச் சிறந்த முறையில் தேர்ச்சி அடையச் செய்யும் நைனா, அந்த மாணவர்களைக் கொண்டே அறிவியல் கண்காட்சியிலும் பள்ளியை வெற்றியடையச் செய்கிறார்.

நைனா, தான் பயின்ற பள்ளியின் முதல்வராகி ஓய்வு பெறுவதோடு படம் முடிவடைகிறது. 'ஹிச்கி' படத்தின் வசனங்கள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

'கெட்ட மாணவர் என யாரும் கிடையாது. கெட்ட ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள்' என பேசும் நைனா, நல்ல ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகி நிற்கிறார்.

2018ஆம் ஆண்டு வெளியான இப்படம், நல்ல வரவேற்பைப் பெற்றது. இதை சித்தார்த் பி மல்ஹோத்ரா இயக்கியிருந்தார். ஆசிரியர் பணியை நேசிப்பவர்களுக்கு இப்படம் உத்வேகமாக இருக்கும்.



- அருண் பாண்டியன்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஓவியம்: வேதா




# பிரம்பு உபதேசம்

மேலாண்மை பொன்னுசாமி



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பிரம்பு வாத்தியார் மடியில் மடித்துக் கிடந்த நீலக் கவர் உள்ளே காலையை ஒரு மழலையை வருடுகிற பாசத்தில் தடவிக் கொடுத்தார். காலையின் முன்முன்னான இளம் ஸ்பரிசம் உள்ளங்கை வழியாக அகத்தில் சுகமாய் இறங்கிப் பரவியது.

பத்து வரைக்கும் படித்து முடித்துவிட்டு, வேலை வெட்டி எதுவும் கிடைக்க வழியில்லாமல் வேலை வாங்க பணவசதியுமில்லாமல் ஊரைச் சுற்றித் திரிந்த கந்தசாமி, வறுமைப் பிடுங்கல் தாளாமல் அம்மா வயிற்றெரிச்சலில் திட்டித்தீர்க்க, வாலிபப் பிள்ளை கோபித்துக் கொண்டு எங்கோ ஓடிப்போய்விட்டான். 'அங்கே, இங்கே' என்று இலக்கில்லாமல் திரிந்துவிட்டு, திரும்பிவரக் காசில்லாமல் தத்தளித்தபோது, அவன் இருந்த இடம் திருச்சி. பட்டாளத்துக்கு ஆள் எடுக்கிற இடத்தில் புகலில்லாமல் ஒதுங்கி வரிசையில் நிற்க, செலக்ட் ஆகிவிட்டான்.

ட்ரெயினிங் பீரியட் முடிந்த பிறகும் ஆறு மாசம் டூட்டியில் இருந்துவிட்டு ரெண்டு மாச லீவில் நேற்றுத்தான் ஊர் வந்து சேர்ந்தான். கரும்பச்சை காக்கியில் ட்ரெஸ்ஸும், தொப்பியும் மாட்டி, வினோதமான பெட்டி படுக்கையோடு பஸ்ஸில் வந்து இறங்கிய அவனைக் கண்டு, அடையாளம் தெரியாமல் தவித்தது கிராமம்.

இன்றைக்கு என்னடாவென்றால்... பிரம்பு வாத்தியார் வீட்டுக்குள் வந்து "வணக்கம் சார்" என்றான். வாத்தியாருக்கு ஏகக் குழப்பம். யாரென்று நிதானம் பிடிபடவில்லை. கண்ணாடியை ஏற்றி விட்டுக்கொண்டு அண்ணாந்து பார்த்தார். பரிச்சயமான குரலாக, முகமாக இருக்கிறதே என்கிற தவிப்பு வேறு...

"சார், என்னைத் தெரியலியா...? நாந்தான்..."

அவர் முகத்தில் சட்டென்று ஒரு வெளிச்சப் பரவல். நிதானம் பிடிபட்டுவிட்ட மகிழ்ச்சி.

"அடடே... நம்ம பழைய ஸ்டூடண்ட் கந்தசாமி இல்லே? [illegible]"

"ஆமா... சார்"

"டெல்லியிலே இருக்கிறதாகச் சொன்னாங்களே?"

"நேத்துத்தான் சார்... வந்தேன்."

"லீவிலேயா?"

"ஆமா சார். ரெண்டு மாச லீவு"

"ரொம்ப சந்தோஷம் உன்னை இப்படி [illegible]"

"ரொம்பவே சார்."

"அடா! [illegible]"

"சார்! இன்னிக்கு நா இப்படி ஒரு [illegible]"



இருக்கிறதுக்கே... நீங்களும் உங்க பிரம்பும்தான் சார்... முழுக்காரணம்."

"என்னப்பா சொல்றே கந்தசாமி?"

"ஆமா சார். நாளாங்கிளாஸ்லே நா சேர்ந்த புதுசு பள்ளிக்கோடமே போகமாட்டேன்னு எங்கம்மாகிட்டே ஒரே பிடிவாதமா பண்ணுனேன். அம்மாவும் எம்புட்டோ... என்னைக் 'கெஞ்சி, கெஞ்சி'ன்னு கெஞ்சிப் பாத்தா. நா முடியாதுன்னுட்டு ஆத்துக்காட்லே சுத்திக்கிட்டிருந்தேன்."

"அப்படியா?"

"அப்பத்தான்... நீங்க ஒரு நா... சாயங்கால நேரத்துலே ஆத்துலே வைச்சு என்னைப் பாத்தீக. 'ஏன்டா ஸ்கூலுக்கு வரலே'ன்னு ஒரு அதட்டு அதட்டுனீக. உங்ககிட்டே பிரம்படி பட்ட அனுபவம் எனக்கு. அம்புட்டுத்தான் பதறிப்போய் டவுசரை நனைச்சிட்டேன்."

வாத்தியாருக்கு சிரிப்பாணி அள்ளிக்கொண்டு வந்தது. வெகுளித்தனமாய் கந்தசாமி சொல்லச் சொல்ல, இவருள் விரிகிறது காட்சிப்படலம். பிடிபட்ட குருவிக் குஞ்சாய் தவித்து விழிக்கிற ஒரு சிறுவன்... நடுக்கத்தில் ஒன்னுக்கிருந்து நனைந்து துவள்கிற டவுசர்...

அணி அணியாய் பொத்துக்கொண்டு வெடித்த சிரிப்பு மனம் விட்டுச் சிரித்தார். கந்தசாமி லஜ்ஜை தாளாமல் நெளிவதைக் கண்டு சிரிப்பை சிரமப்பட்டு அடக்கினார். அடக்க அடக்க... சிதறிச் சிதறி விழுந்த சில்லறைச் சப்தமாய் கரைந்து தணிந்தது.

கந்தசாமி தொடர்ந்தான்:

"அப்ப நீங்க சொன்னீக: 'ஏலேய், எம்பிரம்பைப் பத்தித் தெரியுமாடா, ஒனக்கு? நாளையிலேயிருந்து ஒழுங்கு மரியாதையாய் ஸ்கூலுக்கு வரணும். இல்லே... பிரம்பு பிஞ்சு போகும்'னு சொல்லிட்டுப் போயிட்டீக... மறுநாளே ஸ்கூலுக்கு வந்துட்டேன்."

"அடடே... அப்படியா சங்கதி?"

"ஆமா சார். அன்னிக்கு பிரம்பைக் காட்டி நீங்க அதட்டுப் போடலேன்னா... ஆத்துக்காட்லே சுத்தித் திரிஞ்சு, ஆட்டுக்குட்டி மேய்ச்சிக்கிட்டு, எதிர்காலத்தையே நாசம் பண்ணியிருப்பேன். படிச்சு முடிச்சு, உருண்டு புரண்டு நா இன்னிக்கு ஒரு உத்தியோகத்துக்கு வர முடிஞ்சதுன்னா... அதுக்கு நீங்கதான் சார் காரணம்!"

"ஆமாம்... நீ படிக்கிறப்ப, அந்த செட்லேயே நீ தானே பஸ்ட் ரேங்கா இருந்தீயே?"

"ஆமா சார். உங்க பிரம்புக்குப் பயந்துக்கிட்டு ஸ்கூலுக்கு வந்தேன். அந்தப் பயத்துலேயே நல்லா படிச்சுட்டேன்."

ஆள் பார்க்க வாட்டசாட்டமாய் லட்சணமாயிருந்தான். டிப்டாப்பாக டிரஸ் பண்ணியிருந்தான்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஜம்முவில் இவர் ஞாபகமாய் ஒரு உல்லன் சால்வையை வாங்கினானாம். மார்கழி, தைப் பனிக்குக் கதகதப்பாயிருக்கும் என்று நினைத்தானாம். நன்றி உணர்ச்சியுள்ள நல்ல பயல்.

சால்வையை வழங்குகிறபோது. முத்து முத்தாய் ஒரு விஷயம் சொன்னான்: "உங்க அருமையை நீங்க தெரிஞ்சிருக்கீகளோ... இல்லையோ சார். உங்க அருமையாலே முன்னுக்கு வந்த எங்களுக்குத்தான் சார், அதோட அற்புதமும், மகிமையும் தெரியும்."

இது... நூற்றிலொரு வார்த்தை. சத்தியமான நிஜம். ந்த நிமிஷம் வரைக்கும் இந்த உத்தியோகத்திற்கு ப்படியோர் மவுசு உண்டு என்று மனசால் ணர்ந்ததேயில்லை அவர். கந்தசாமி சொல்லச் சொல்ல, வருள் ஏதோ திரண்டு வந்து நெஞ்சுக்குள் அடைத்தது. ந வகையான மூச்சுத்திணறல். கண்ணோரங்களில் மன கிழ்வின் கசிவு. நரம்புகளின் ஊடே ஓடிப் பாய்ந்த வச உணர்ச்சி.

ஏதோ... ஒரு மாயக்கரம் நீண்டு வந்து கிரீடம் தூக்கி லையில் வைத்த மாதிரியானதோர் மனப்பிரமை. சுகமான க்கமூட்டுகிற மாயப்பிரமை.

பட்டாளத்தான் கந்தசாமி போய் ரொம்ப ரமாகிவிட்டது. இன்னும் அந்தப் பிரமையிலிருந்து லக முடியவில்லை. விலக மனமில்லை. தேனின் சுபிசுப்புக்குள் சிக்குண்ட எறும்பாக அவர்.

செவிக்குள் அவனது வார்த்தைகள். விசுவாசமும், நன்றி உணர்ச்சியுமான ஈர வார்த்தைகள். 'சம்பளத்துக்கு மாரடிக்கிற உத்யோகம் மட்டுமில்லை. அதற்கும் மேலான மேன்மைகள் உள்ள சிருஷ்டிப்புத் தொழில்... ஞானப் பிரம்மத் தொழில்...' என்று உணர்த்துகிற இவருக்கே இவரை உணர்த்துகிற வார்த்தைகள்.

அந்த லயிப்பிலேயே புரண்டு மயங்கிய மனசுக்குள் முகம் காட்டுகிற ஓர் எண்ணம்.

'அவன் கிரீடம் சூட்டிப் பாராட்டுனது, என்னையா... என்னோட பிரம்பையா?'

அந்த எண்ணம் வந்தவுடன், தன்னுள் தானாய்க் கு ந்த மனநிலையில் பெருமை பொங்க மு லித்துக்கொண்டார்.

'ம்தான். நா வேற, பிரம்பு வேறன்னு பிரிச்சுப் பார்க் முடியுமா.. என்ன?'

ப சிவம் வாத்தியார் அந்தக் கால இ.எஸ்.எல்.சி. அதா து, எட்டு. டீச்சர் ட்ரெயினிங்கில் (பணம் கட்டாமல்) இடமும், முடித்தவுடன் (லஞ்சம் கொடுக்காமல்) உத்தியோகமும் அட்டியில்லாமல் கிடைத்த காலம் அது.

வாத்தியார் உத்தியோகத்தில் வஞ்சகமில்லாமல் பாடுபட்டார். நூறு ரூபாய், நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தில் நொம்பலப்பட்ட காலம் நிறைய. கிழிந்த பனியனை சட்டையைப் போட்டு மறைத்துக் கொள்கிற வாழ்க்கை. கிழிசலை மடிப்புக்குள் தள்ளி துண்டைத் தோளில் போட்டு சமாளித்த அனுபவம்.

'வக்கத்தவனுக்கு வாத்தியார் உத்தியோகம்' என்ற சொலவடை புழக்கத்திலிருந்த காலத்தில்... வறுமை அவலத்தின் சகல அவமானங்களையும் தாங்கிக்கொண்டே, வகுப்பில் நேர்மையும் ஆர்வமுமாய் உழைத்தவர், பரமசிவம் வாத்தியார்.

வறுமைப்பட்ட வாழ்க்கை பந்தாட, கடைகளில் தெருக்களில் சம்சாரிகளிடம் இவர் நடித்த நடிப்பு. போலிப் புன்னகை, கைமாத்துக்கு அலைகிற அவமானம். நேர்கிற மனக்காயம் எல்லாம் நிறம் மாறி அவர் கையிலிருக்கும் பிரம்பில் வந்து நிற்கும்.

போக்கிடமற்ற உள்குமுறலும், புகலிடமற்ற ஊமைக் கோபங்களும் அவரை கடுகடுத்த முகமும், கண்டிப்புமான ஆளாக ஆக்கிவிடும்.

'அடியாத மாடு பணியாது' என்ற சொலவடையில் அவருக்கு ரொம்ப விசுவாசம், ஆழ்ந்த நம்பிக்கை. பிரம்பும், கையுமாய் வகுப்பில் உயிர் கரைந்து செயல்படுவார். பிரம்பு வேறு, அவர் வேறு என்று பிரித்துப் பார்க்க வழியிருக்காது. அவருக்கு முளைத்த மூன்றாவது கை மாதிரி, பிரம்பு.

> பிரம்பும், கையுமாய் வகுப்பில் உயிர் கரைந்து செயல்படுவார். பிரம்பு வேறு, அவர் வேறு என்று பிரித்துப் பார்க்க வழியிருக்காது.

பிரம்பை தாராளமாகவே பிரயோகிப்பார். 'பிரம்புதான் பிள்ளைகளுக்குப் போதி மரம்' என்று நம்புவார். பிரம்பின் நுனியை ஒரு உதறு உதறிவிட்டு சுளீரென்று விளாசினால்... அந்தச் சத்தம் பாதி ஊருக்குக் கேட்கும். அடிபட்டவன் கதறுகிற கதறலில், அடுத்தவன் ஒன்னுக்கு இருந்துவிடுவான். அடிபட்டவன் ஜென்மத்துக்கும் மறக்கமாட்டான், தீப்பட்ட மாதிரி வலிக்கிற அந்த வேதனையை...

நாலாப்பைத் தாண்டிப் போன சகல பிள்ளைகளும் இந்தப் பிரம்படியிலிருந்து தப்பித்துப் போனதில்லை. அப்படி யாரேனும் போயிருந்தால்... அது உலகின் பத்தாவது அதிசயம்.

இவரது பிரம்படி ரொம்பப் பிரபல்யம். பள்ளியில் மட்டுமல்ல, ஊர்மடத்தில் இழவு வீடுகளில் குடிநீர் கிணற்றடியில் இப்படி மனுச மக்கள் கூடுகிற இடமெல்லாம், இது பற்றிய பேச்சு நிச்சயம்.

பிரம்பால் வந்த வினை ஜாஸ்தி. வம்பு தும்புகளுக்குப் பஞ்சமேயில்லை. அடிபட்ட பிள்ளையின் பெற்றவர்கள் மனம் கொதித்துப் போய் வந்து, சண்டை போட்டு நாற வசவு வதை கதைகள் அநேகம். அதற்கெல்லாம் அசறுகிறவர் கிடையாது, பரமசிவம் வாத்தியார்.

'வாத்தியார் அடிச்சவுடனே சண்டைக்குத் தாய் தகப்பன்மார் வரலாமா, சார்? அறிவிருந்தா... வருவாகளா? இந்தத் தாய், தகப்பன்மார் அவுக புள்ளைகளை அடிக்கவே மாட்டாகளா? பூப்போட்டு ரோராட்டுவாகளோ? வாத்தியார் அடிச்சிட்டா மட்டும், புள்ளே கொறைஞ்சு



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

போவானோ? போங்க சார்" என்று அலட்சியமாகப் பேசுவார். அதோடு, தர்க்கரீதியாகவும் வாதாடுவார்.

'இப்படிப்பட்ட தாய் தகப்பன்மார்களாலேதான் புள்ளைக கெட்டழிஞ்சு, யாருக்கும் பயன்படாம நாசமாயிடுதுக. புள்ளைக முன்னாலே வாத்தியாரை மானக்கேடா பேசுனா… அந்தப் பய வாத்தியாரை மதிப்பானா? படிப்பை மதிப்பானா? படிக்காம புத்தி கெட்டுப்போய் ஆடுகாலித்தனமாய் அலையிற பய, நாளைக்குத் தாய் தகப்பனை மட்டும் மதிப்பானா? ஊர் உலகத்தை மதிப்பானா? தர்ம நாயத்தை மதிப்பானா?'

ஆக… சகலர் வாய்களிலும் விழுந்து புரண்டு பரமசிவம் வாத்தியார்…நீரோடு உருண்டு வருகிற கூழாங்கல் மாதிரி, பரமு வாத்தியாராகத் தேய்ந்து… பிரம்பு பிரபல்யத்தினால் 'பிரம்பு வாத்தியார்' என்றாகி விட்டார். சக ஆசிரியர்கள்கூட அவரைப் 'பிரம்பு சார்!' என்றுதான் கூப்பிடுவார்கள்.

'அலோ பிரம்பு சார், ஆர்ப்பாட்டத்துக்குப் போனீகளா?' 'என்ன பிரம்பு சார், மறியலுக்கு உங்க பேரைக் குடுக்கப் போறீகளா, சார்?'

'பட்ஜெட்லே நமக்கு என்னமும் உண்டா, பிரம்பு சார்?' இப்படித்தான்… ஒரு தடவை பள்ளிக்கு இன்ஸபெக்ஷனுக்காக ஏ.இ.ஓ. (உதவிக் கல்வி அலுவலர்) வந்திருந்தார். தங்கமான மனிதர். சுத்தமான நேர்மை. வேலைகளில் கறார். தனி உபச்சாரம் எதிர்பார்க்க மாட்டார். மென்மையானவரும்கூட. சக தோழர்களாக ஆசிரியர்களை மதித்து மிருதுவாக நடத்துவார்.

சுருங்கச் சொன்னால்… ஏ.இ.ஓ.க்களில் அவர் ஓர் அத்திப்பூ.

அவர் வந்திருந்த சமயத்தில், ஹெச்.எம். ஒவ்வொரு காரியத்துக்கும் 'பிரம்பு சார்', பிரம்பு சார்' என்று அடிக்கொரு தடவை கூப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அந்தப் பெயரின் வித்தியாசத் தொனி, ஆபீஸரை உறுத்த, அது பற்றிக் கேட்டார். ஹெச்.எம். தர்மசங்கடமாய் நெளிந்தார்.

அதை இதைச் சொல்லிச் சமாளித்துப் பார்த்தார். ஆபீஸர் விடுவதாக இல்லை. உள்ளதைச் சொல்லும்படியாகிவிட்டது.

முழுக் கதையையும் கேட்டுவிட்டு, மென்மையாய் முறுவலித்தார். பிரம்பு சாரைக் கனிவோடு பார்த்து மிருதுவான குரலில் கூறினார்:

"உங்க கொள்கைக்கு உங்க அளவுலே வலுவான அனுபவம் காரணமாயிருக்கலாம். ஆனா, என்னோட ஒப்பீனியன் என்னன்னா… நடத்துற பாடங்கள்லே நமக்கு நல்ல தெளிவும், நடத்துற முறையிலே தன்னம்பிக்கையும் இருந்தா… ஒரு நல்ல ஆசிரியருக்கு பிரம்போட உதவி எந்த நேரத்துலேயும் தேவைப்படாது. பிரம்பும், மிரட்டலும் சர்க்கஸ் மிருகங்களுக்குத்தான் அவசியம். புள்ளைகளுக்கு அவசியமேயில்லே."

ஏ.இ.ஓ. போன பிறகு, பிரம்பு வாத்தியார் ரொம்ப ஆவேசமாய் மறுத்துப் பேசினார். ஹெச்.எம்மிடம்.

"இவரு கிடக்காரு– இவருக்கு அனுபவம் பத்தாது, சார். ஏட்டுச் சுரைக்காயை நம்மகிட்டே குழம்பு வைக்கக் குடுக்கிறாரு. நானுந்தான் டீச்சர் ட்ரெயினிங்க்லே படிச்சேன். அங்கேயும் சைக்கலாஜிப் பிரிவுலே இதே சுரைக்காயைத்தான் நமக்குச் சொல்லிக் குடுத்தாக. ஆனா, நடப்புக்கு ஒத்துவரல்லியே…"

அவருக்குப் பிரம்பு மேலுள்ள காதல் குன்றவேயில்லை. 'அடியைப் போல அண்ணன் தம்பிகூட உதவ மாட்டான்' என்ற சொலவடையை உண்டாக்கிய மாமனிதரைத் தேடிக் கொண்டிருக்கிறார், வாயில் சீனியை அள்ளிப் போட.

இதோ பட்டாளத்துக் கந்தசாமி, பிரம்புக்கு கிரீடம் சூட்டிவிட்டுப் போகிறான். அவன் பரிசாக வழங்கிவிட்டுப் போன உல்லன் சால்வை, கருநீல நிறத்தில் ஆகாயம் போல சால்வை, வெள்ளி மேகக்கோடாக ரெண்டு பார்டர்.

பத்தாவது தடவையாக விரித்துப் பார்க்கிறார். பிடிபடாத பெருமை. பொங்கிப் பொங்கி வழிகிற பூரிப்பு தலைகால் புரியாத சந்தோஷத் தத்தளிப்பு.

இவரால் உருப்பட்டவர்கள், இவரது பிரம்புபதேசத்தில் ஞானம் பெற்று வசப்பட்டவர்கள். ஒழுங்கு நிலைக்கு வந்து உயர்ந்து போனவர்கள்.

இது, அவர் கொள்கைக்குக் கிடைத்த விருது. வாழ்ந்த வாழ்க்கைக்கான அர்த்தம். அவரையே அவருக்கு உணர்த்திய உன்னதம். சால்வையைப் பெருமையாகப் போர்த்திக்கொண்டு வெளியேறினார். நாலு பேரிடம் காட்டணும். ஏது சால்வை என்று விசாரித்தால் நிறையச் சொல்லணும். மனசுக்குள் ததும்பல். பூரிப்பில் மிதக்கிற அவருள் அலை அலையாக நினைவுகள். இவரிடம் பிரம்படி வாங்கிப் படித்து முன்னேறியவர்கள் டாக்டர், இன்ஜினியர், வழக்கறிஞர், தொழிலதிபர், சென்னை வண்ணாரப் பேட்டையில் பலசரக்குக் கடை முதலாளிகள் என்று வரிசை வரிசையாய் முகங்கள்.

இவரால் உருப்பட்டவர்கள், இவரது பிரம்புபதேசத்தில் ஞானம் பெற்று வசப்பட்டவர்கள். ஒழுங்கு நிலைக்கு வந்து உயர்ந்து போனவர்கள்.

கந்தசாமி புகழ்ந்த புகழ்ச்சியில்… அவருள் புதைந்து கிடந்த சாதனைகளெல்லாம் உயிர் பெற்று ஊர்வலம் வர, ஊர் மடத்திற்கு வந்தார். அங்கு எப்பவும் ஒரு கூட்டம். சமுத்திரம் மாதிரி, வற்றவே வற்றாது.

அந்தச் சூழலுக்கே உறுத்தலான அந்நியமாய் அந்தச் சால்வை ஒளி வீசி, கவனங்களை ஈர்த்தது.

"என்ன சார், மார்கழி மாசம்னு நெனைச்சீகளா? ஆடி மாசத்துலே உல்லன் சால்வையை மூடிக்கிட்டு வாறிகளே?"

இது போதாதா? இவர் அள்ளி விட ஆரம்பித்துவிட்டார். அவருள் ததும்புகிற பெருமிதம்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

முகமெல்லாம் பூரிப்பின் மின்னல் எல்லாம் வார்த்தைகளாகி...

காலைக் காண்டு மதிய வரைக்கும் த்ரீபேஸ் காண்டு கூலிக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு, களித்து முடித்து, ஈரக்கையியும் துண்டுமாய் வந்தான். சின்னச்சாமி தோளிலிருந்த மண்வெட்டியைக் காலாட்டில் வைத்துவிட்டு, நின்ற நிலையில் வாத்தியார் பேச்சில் உன்னிப்பானான்.

அவன் பாதமெல்லாம் நீரில் ஊறி நனைந்து வெள்ளியாக ஒடிக் கிடந்தது. கணுக்காலுக்குக் கீழே ரத்த ஓட்டமே அற்றுப்போன மாதிரி வெளுத்துக் கிடந்தது.

பிரம்பின் அருமை, பட்டாளத்தான் கந்தசாமியிலிருந்து, டாக்டர், வக்கீல் என்று வண்ணாரப்பேட்டை கடை முதலாளி வரைக்கும் வந்துவிட்டார், வாத்தியார். மெய்மறந்து பேசிக்கொண்டிருந்தார்.

ஒரு பீடியைப் பற்ற வைத்து குச்சியை எறிந்த சின்னச்சாமி, சமயம் பார்த்து பேச்சில் கலந்துகொண்டான்.

"எங்கய்யாவுக்கு நா ஒத்தைப்புள்ளை. என்ன பாடு பட்டாச்சும் என்னைப் பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னு அவருக்கு ரொம்ப ஆசை. வாய்க்கு வாய் அந்த ஆசையைச் சொல்லிக்கிட்டேயிருப்பாரு. நானும் நல்லாத்தான் படிச்சேன். நாலாப்புக்கு வந்து சேந்தேன். நாலாப்புலே சார்தான் வாத்தியாரு. பிரம்பை வைச்சு அடின்னா... அடி. அப்படி அடிப்பாரு எடுத்ததுக்கெல்லாம் அடிதான். என்ன ஏதுன்னு விசாரிப்பே கிடையாது. ரெண்டு பயக சண்டை போட்டா... ரெண்டு பேருக்கும் அடிதான். சாணி பிதுங்கிப்போகும்..."

எல்லாருக்கும் கதை கேட்கிற ஆசை. வாத்தியாரும் சின்னச்சாமியையே பார்த்தார்.

"அப்படித்தான் ஒரு நா. பின் பெஞ்சலே சம்பத்து உக்காந்துருந்தான். முன்பெஞ்சலே நா. என்னைக் கிள்ளிக் கிள்ளி வைச்சான். 'சும்மாயிருடா'ன்னேன். பாடம் நடத்திக்கிட்டிருந்த சாரு, 'என்ன சத்தம்'னு பிரம்பை எடுத்தாரு. அம்புட்டுத்தான். என் உடம்பு பூரவும் இடி மின்னல். சரீர் சரீர்னு பிரம்படி. துள்ளத் துடிக்க அலறிக்கிட்டு அன்னிக்கு ஓடிப்போய், மம்பட்டியை தூக்குனவன்தான்... இந்தா... கூலிக்காரனா இன்னிக்கும் மம்பட்டிப் பொழப்புதான். என்னை மாதிரி ஓடிப்போன பயக எத்தினி பேரோ?"

விளையாட்டும் சிரிப்புமாய் வேடிக்கையாய்ப் பேசினான், சின்னச்சாமி. எல்லோரும் 'சிரியோ, சிரி'யென்று சிரித்து உருண்டார்கள். மடம் முழுக்க சிரிப்பாணி.

வாத்தியாரும் சிரித்து வைத்தார். ஆளோடு ஆளாய். உடன்பாடில்லாத சிரிப்பு. அசட்டுச் சிரிப்பு. உள்ளுக்குள் சின்னச்சாமியின் அனுபவம், ஊசியாகப் பாய்ந்து குத்தியது. ஆசிரிய மனம் குற்ற உணர்வில் கூசியது.

வேடிக்கையும் கூத்துமாய் பேசினாலும், விஷயம் இதுதானே? 'படிப்புக் கனவை உதறிப்போட்டு கூலிக்காரனா நா மாறுனதுக்கு ஓம் பிரம்புதான் காரணம். இப்படிப் பல பேரு படிக்க முடியாம பதறி ஓடுனதுக்கும் ஓம்மோட பிரம்புதான் காரணம்.'

இதைத்தானே... சொல்லாமல் சொல்கிறான், சின்னச்சாமி? அப்போ... பட்டாளத்தான் கந்தசாமி சொல்றது?

எது நிஜம்? கந்தசாமியா, சின்னச்சாமியா? ரெண்டுமே நிஜம்தானா?

பிரம்புக்குப் பணிந்து உருப்பட்ட கந்தசாமிகள் ஒரு சிலராகவும், பயந்து வெருண்டோடிய சின்னச்சாமிகள் பலராகவும் இருக்குமோ...?

காற்றுப் போன பலூனாக சப்பென்று துவண்டு மண்ணில் விழுந்தது, அவரது மனம். குற்ற உணர்வின் முள் உறுத்தல்.

'படிக்க விடாம பயமுறுத்தித் தொரத்தியடிச்ச பாவி' என்று மௌனக் கதறலாக அலறுகிற சின்னச்சாமிகளின் குற்றச்சாட்டுகள்.

மனச்சாட்சி வேதனை தாளாமல் மௌன அலறலாய் அலறுகிறது.

அன்றைக்கு, அந்த ஏ.இ.ஓ. சொன்ன ஒப்பீனியன்... 'தெளிவும் தன்னம்பிக்கையும் உள்ள நல்ல ஆசிரியருக்கு பிரம்பு எதுக்கு?'

அப்போ தெளிவில்லையா? தன்னம்பிக்கையில்லையா? நேர்மை மிக்க அவருக்குள் கேள்விகள் தன்னைத்தானே விசாரித்துக் குடைகிற கேள்விகள்...

இப்போது சால்வை முள்முள்ளாக உறுத்துகிறது. வேக்காடாகப் புழுங்கி வியர்க்கிறது. சால்வையின் சுமை தாளாமல் அவர் திணறினார்.

திங்கட்கிழமை வழக்கம் போல நாலாப்புக்குள் நுழைந்தார். மேஜையில் கிடந்த பிரம்பை ஒடித்து குப்பைக் காகிதச் சுருள்களோடு சேர்த்து, பள்ளி ஜன்னல் வெளியே வீசியெறிந்தார், பரமசிவம் வாத்தியார்.



**ஆசிரியர் குறிப்பு**

## மேலாண்மை பொன்னுசாமி



விருதுநகர் மாவட்டம், மேலாண் மறைநாடு என்கிற கிராமத்தில் பிறந்தவர். தமிழ்நாடு அறிந்த முற்போக்கு எழுத்தாளர்களில் முக்கியமானவர். இவர் 22 சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைகள் என முப்பதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 'மின்சாரப்பூ' என்கிற இவரது சிறுகதைத் தொகுப்பிற்காக 2007ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருதையும் பெற்றிருக்கிறார்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## கற்பித்தலைச் செம்மையாக்க உதவிய மாணவர்கள்

வகுப்பறையில் ஒருநாள் ஆங்கிலப் பாடத்தில் பாடல் ஒன்றை The Sun is the Sky Shines Bright... Bright... Bright... என்று பாட, என் வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்தேன். சிறப்பாகப் பாடினார்கள்.

அதேபோல் அடுத்த நாளும் அதே பாடலை என்னுடன் இணைந்து பாடச் சொன்னேன். அந்தப் பாடலில் ஒவ்வொரு சரணம் முடிந்ததும் வரக்கூடிய All through the Day / Night என்ற வரியை நான் மறந்துவிட்டுப் பாடி முடித்துவிட்டேன். அதன் பிறகுதான் நான் பாட மறந்த வரியை மாணவர்களுக்கு நினைவூட்டி, பாடி முடித்தேன்.

நான் மாணவர்களிடம் "நான்தான் ஒரு வரியை மறந்துவிட்டேன். நீங்களாவது அந்த வரியைச் சேர்த்துப் பாடியிருக்கலாமே?" என்றேன். அதற்கு ஒரு மாணவி, "டீச்சர், நீங்களே மறந்திட்டீங்கன்னா எங்களுக்கு எப்படி ஞாபகத்துக்கு வரும்?" என்று கேட்டாள். அந்த நிமிடமே எனக்கு மிகவும் வருத்தத்தை தந்தது.

மாணவர்கள் தவறு செய்தால் ஆசிரியர்கள்தான் சரி செய்வார்கள். ஆனால் அன்று என் தவறை என்னுடைய மாணவர்கள் சரி செய்தனர். அன்று முதல் எதைக் கற்பித்தாலும் அதைச் சரியாகவும் தெளிவாகவும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்றும், கற்பிக்கும் பாடம் அல்லது பாடல் சிரமமாக இருக்கும்போது ஆசிரியர் கையேட்டைப் பார்த்துப் புரிந்துகொண்டு சரியாகக் கற்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். அன்று என் கற்பித்தலைச் செம்மையாக்க உதவிய மாணவர்களுக்கு மனதுக்குள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன்.

– **வி.விஜயலட்சுமி,** இ.நி.ஆசிரியர், ஊ.ஒ.தொ.பள்ளி, இண்டூர், நல்லம்பள்ளி ஒன்றியம், தருமபுரி.

## வகுப்பறை கற்றுத் தந்த பாடம்

மாணவர்களிடம் சிறிய கண்டிப்புடன் கூடிய அன்பு என்னிடம் எப்போதுமே இருக்கும். அந்தச் சிறிய கண்டிப்புடன் நான் பயன்படுத்தியிருக்கக் கூடாத ஒரு சொல்லைச் சொல்லாமல் சொல்லி உணர்த்தினான் ஒரு மாணவன்.

நான்கு வயது மாணவன் "அங்கன்வாடி மையத்திற்குச் செல்லமாட்டேன். அக்கா படிக்கும் பள்ளிக்குத்தான் செல்வேன்" என அடம்பிடித்து பள்ளிக்கு வந்தான். அடுத்த வருடம் ஒன்றாம் வகுப்பில் சேர்க்க இப்போதே எல்.கே.ஜி.யில் சேர்த்துக்கொள்ளலாம் என்பது என் எண்ணம். அடுத்த நாளிலிருந்து அவன் வகுப்பில் செய்யும் சேட்டைகள் சிரிக்கும் விதமாகவே இருந்தது. என்னிடம் பயமற்றுப் பழகினான்.



என் கைப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடுவதும், உணவுப் பையில் பாத்திரங்களை வைப்பதும், உணவு இடைவேளையில் தட்டைக் கழுவி சூரிய ஒளியில் தட்டைக் காண்பித்து ஒளியை என்மீது பாய்ச்சிச் சிரிப்பதும் என அவன் சேட்டைகள் தொடர்ந்தன.

அன்றொரு நாள், நான் வகுப்பறைக்குள் நுழைந்தவுடனே, என் தோளிலிருந்த பையை இழுத்தான். நான் சிரித்துக்கொண்டே "விடுடா ஸ்டுப்பிட் (Stupid)" என்று சொல்லிவிட்டு அன்றைய பணிகளைக் கவனித்தேன்.

அன்று மாலையே அந்த மாணவன் என்னிடம் வந்து "ஸ்டுப்பிட்... ஸ்டுப்பிட்..." என்று சிரித்துக்கொண்டே சொன்னான். "என்னடா இப்படிச் சொல்றே?" எனக் கூறிவிட்டு அதை நான் அப்போதே மறந்துவிட்டேன்.

அடுத்த நாள் நான் வகுப்பறைக்குள் நுழைந்ததும் அப்படி ஒரு சிரிப்பு அவனுக்கு. "ஸ்டுப்பிட்... ஸ்டுப்பிட்.." எனச் சொல்லி கைகொட்டிச் சிரித்தான்.

ஒரு நிமிடம் நான் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். எவ்வளவு பெரிய தவறைச் செய்துவிட்டோம். அப்போதுதான் குழந்தைகளிடம் வகுப்பறையில் எதைச் சொல்லவேண்டும், சொல்லக்கூடாது என்பதை உணர்ந்தேன். நான் சிரித்துக்கொண்டே சொன்னதால் அவன் அதை நல்ல சொல் என நினைத்துக்கொண்டு மற்றவர்களிடமும் பயன்படுத்தியிருக்கிறான்.

அவனை நான் அழைத்து அதன் அர்த்தத்தைச் சொல்லி, "இனிமேல் இந்தச் சொல்லை நீயும் பயன்படுத்தக்கூடாது, நானும் பயன்படுத்த மாட்டேன்" என்று அன்பாகக் கூறினேன். அவன் அதை உணர்ந்துகொண்டான்.

வகுப்பறையில் பாடம் நடத்தச் சென்ற எனக்கு வகுப்பறை கற்றுத் தந்த பாடம் இது.

– **அ.விசாலாட்சி,** இ.நி.ஆசிரியர், ஊ.ஒ.தொ.பள்ளி, சின்னங்குப்பம், அரூர் ஒன்றியம், தருமபுரி மாவட்டம்

Publisher: **D. Jagannathan,** Printer: **S. Ramu,** Printed at Chennai Micro Print (P) Limited, #16/1, Gajapathy Garden, Puliyambedu village, Thiruverkadu, Tiruvallur district, PIN Code – 600 077. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006. Editor **Amuthavalli Rajeshkanna**



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

# பள்ளிக் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 2023 - 2024

## ரூ. 40,229 கோடி

**பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்**
புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள் கட்ட, ரூ.1500 கோடி நிதி ஒதுக்கீடு

**'எண்ணும் எழுத்தும் திட்டம்'**
ரூ. 110 கோடி மதிப்பில்
4, 5 ஆம் வகுப்புகளுக்கும் விரிவாக்கம்.

**'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்'**
அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் - ரூ. 500 கோடி ஒதுக்கீடு.

**புத்தகத் திருவிழாக்கள் , ஐந்து இலக்கியத் திருவிழாக்கள்**
தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வரும் ஆண்டிலும் ரூ.10 கோடி நிதியுடன் தொடர நடவடிக்கை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட பிற துறைகளின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளும் **பள்ளிக் கல்வித் துறையின் கீழ்** கொண்டு வரப்படும்.


Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

Kanavu Aasiriyar Monthly Registered with RNI No: TNTAM/2022/82359. Postal Regn No: TN/CH(C)/600/2022-2024
Date of publication 1st Day of every month Posted between 1st - 7th April 2023 Posted at Egmore, RMS/ Patrika Channel

பொது
ஆசிரியர் கவிதை

# சிற்பியும் சிற்பங்களும்



அலைபேசியின் அனைத்தும்
அவனுக்கு அத்துப்படி
மடிக்கணினி மல்லுக்கட்டி
தோற்கிறது அவனிடம்

நடை பயணத்தின்
களைப்பு தெரியாதவன்
மிதிவண்டிப் பயண
வியர்வைத் துளிகளைக்
காணாதவன்
மோட்டார் வாகனத்தை
இயல்பாய் இயக்கும்
எந்திரன் அவன்.

உளி எடுக்க முடியாது
செதுக்க வேண்டிய
கடமையும் உள்ளது
என்ன செய்வோம்?

நமது அன்பான வார்த்தைகள்
அவன் மனதில் உளியாய் இறங்கட்டும்!
புதிய அணுகுமுறைகள் -அவன்
உணர்வுகளைப் புதுப்பிக்கட்டும்!

அவன் முதலில்
மனிதம் கற்கட்டும்
பாடங்கள் எளிதாய்
சாத்தியப்படும்!

பயணிப்போம்...
என் ஆசிரியர் என்று அவனும்
என் பிள்ளை என்று நாமும்
உயர்ந்த இடத்தில்
சந்திக்கும் நாளை நோக்கி...!

- D. ஸ்டெல்லா ஏஞ்சல்,
பட்டதாரி ஆசிரியர், அரசினர் மகளிர்
மே.நி.பள்ளி, தம்மம்பட்டி, சேலம்.

கனவு ஆசிரியர்
ஆசிரியர்களே! உங்கள் படைப்புகளும் இடம் பெற வேண்டுமா? எழுதி அனுப்புங்கள்...
ஆசிரியர், 'கனவு ஆசிரியர்', ஆறாம் தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 600 006. மின்னஞ்சல்: kanavuaasiriyar@tnschools.gov.in



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com